வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 03
11.01.2022 செவ்வாய்க்கிழமை
இதழ் : 37
பக்கங்கள் : 16




## வெளிநாட்டுப் பிரஜை ஒருவரால் போர்க்களமானது கட்டுநாயக்கா!

### கொமாண்டோக்கள் களம் இறங்கினர்

கொழும்பு, ஜன. 11

அபுதாபி ஊடாக பிரான்ஸின் பாரிஸ் நகருக்கு தப்பிச் செல்ல முற்பட்ட வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு,குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்படவிருந்தபோது அங்கிருந்து வெளியேறி ஓடித் தப்ப முயன்றார்.

அவரை விமானப்படையின் கொமாண்டோக்கள் சுற்றிவளைத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள், இலங்கை விமானப்படை கொமாண்டோக்கள், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட

15

## ஐக்கிய மக்கள் சக்தியின் அரசை நிச்சயம் நாம் உருவாக்குவோம்!

### புதுக்குடியிருப்பில் சஜித் சூளுரை

முல்லைத்தீவு, ஜன. 11

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை நிச்சயம் உருவாக்குவோம். அதில் இந்த அரசாங்கத்தால் திட்டமிட்டு நிறுத்தப்பட்ட வீடுகள் மாத்திரமல்லாது அனைத்து மக்களினதும் வீடற்ற பிரச்னையை தீர்ப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ புதுக்குடியிருப்பில் மக்கள் மத்தியில் சூளுரைத்தார்.

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள சஜித் பிரேமதாஸ நேற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கெடுத்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு

15

## கோட்டாபய அரசு கவிழ்வது உறுதி!

### விமல் வீரவன்ஸ சொல்கிறார்



கொழும்பு, ஜன. 11

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ் வது எப்போது என்று இப்போது கூற முடியாது.”

15

## அரசுக்குள் இருந்துகொண்டு எதிரணி வேலை செய்யாதீர்!

### வெளியுறவு அமைச்சர் பீரிஸ் சீற்றம்



கொழும்பு, ஜன. 11

“அரசுக்குள் இருந்துகொண்டு எதிரணி வேலையை செய்யமுடியாது. அதேபோல ஒரு அரசுக்குள் பல அரசுகள் செயற்படவும் முடியாது.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு பதிலடி கொடுத்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

15

## சு.கவின் தலைமையில் விரைவில் புதிய அரசு!

### சவால் விடுகிறார் மைத்திரிபால



கொழும்பு, ஜன. 11

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்னும் சில மாதங்களில் நாட்டின் பலம் வாய்ந்த அரசியல் கட்சியாக மாறும் என முன்னாள் ஜனாதிபதி

15

# 10 அமைச்சுகளுக்கான அதிகாரங்களில் மாற்றம்!

### அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டார் ஜனாதிபதி



கொழும்பு, ஜனவரி 11

**10 அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களையும் அவற்றுக்கான அதிகார செயல்பாடுகளையும் திருத்தியமைக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வெளியிட்டார்.**

2022 ஜனவரி 10ஆம் திகதி 2187/27 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் கீழ் இருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் ஆகியவை பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்கல்

15

## வடக்கில் சுழற்சிமுறை மின்வெட்டு அட்டவணை விவரம்

02

## யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குள் வீட்டில் மருத்துவ பராமரிப்பு சேவை

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகப் பகுதிக்குள் வீட்டில் மருத்துவ பராமரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

யாழ். மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் வீட்டில் இருந்து வைத்தியசாலைக்கு

15

## உள்ளூராட்சி சபை பதவி காலம் நீடிப்பு

கொழும்பு, ஜன. 11

நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைக ளின் பதவிக் காலம் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி நேற்றிரவு வெளியிடப்பட்டது.

கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. இவற்றின் பதவிக்காலம் இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் நிறைவடைகின்றது.

இந்த நிலையிலேயே, உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை 2023 மார்ச் 19ஆம் திகதி வரை நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை-சீனா உறவில் இனி புதிய அத்தியாயம்

### கொழும்புப் பயணத்தை முடித்து திரும்பிய அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

பீஜிங், ஜன. 11

இலங்கையுடனான உறவுகளை புதிய அத்தியாயத்துக்கு கொண்டு செல்லவும் பொதுவான அபிவிருத்தி மூலோபாய பங்காளித்துவத்தை ஆழப்படுத்தவும் சீனா தயாராக உள்ளது என இலங்கை வந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தெரிவித்தார்.

இலங்கைக்கான இரண்டு நாட்கள் பயணத்தை முடித்துக் கொண்டு சீனா திரும்பிய பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.

15

## விக்னேஸ்வரனின் கட்சிக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜன. 11

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த மூன்று கட்சிகளை அங்கீகரித்து பதிவு நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம்

15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு கிராமத்தில் உள்ள எல்லோரையுமே முட்டாள்கள் என்று மற்றக் கிராமத்தவர்கள் கூறிவந்தனர்.

இதனால் கோபமுற்ற அந்தக் கிராமத்தவர்கள் தாங்கள் முட்டாள்கள் இல்லை என்பதை நிரூபிக்க ஒரு போட்டி நடத்துவதென்று தீர்மானித்தனர்.

அதன்படி பெரிய அரங்கு ஒன்றில் இந்தக் கிராமத்தவர்களின் கணித அறிவு திறமையை நிரூபிக்கும் போட்டி நடத்தப்பட்டது.

அந்தக் கிராமத்திலிருந்து நிறையப்பேர் போட்டி நடக்கும் அரங்குக்கு வந்திருந்தனர்.

அந்தக் கிராமத்தவர் அல்லாத நடுவர்கள் (முதலாம் வகுப்பு கணக்கு வாத்தியார்கள்தான்) பங்கேற்றனர்.

முதலில் அங்கு வந்திருந்ததிலேயே கொஞ்சம் புத்திசாலியான அந்தக் கிராமத்தவர் ஒருவர் மேடைக்கு வந்து சோதனைக்கு தயார் ஆனார். அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

நடுவர் முதல் கேள்வியாக ஐந்தும் ஐந்தும் எவ்வளவு? என்று கேட்டார்.

அதற்கு அவர் நிறைய யோசித்துவிட்டு இருபது என்றார்.

நடுவர் தலையை ஆட்டினார். தவறு என்பதை சைகை முலம் தெரிந்துகொண்ட அந்தக்கிராமத்தவர்கள்,

பரவாயில்லை இன்னொரு சந்தர்ப்பம் கொடுங்கள் என்று கத்தினர்.

நடுவரும் சரி, ஏழும் மூன்றும் எவ்வளவு என்றார்.

அதற்கும் அவர் எட்டு என்று பதிலளித்தார். நடுவர் மீண்டும் தலையை ஆட்டினார்.

பார்வையாளர்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள் என்றனர்.

நடுவர், கடைசிச் சந்தர்ப்பம் என்றுவிட்டு இரண்டும் இரண்டும் எவ்வளவு என்றார்.

அவர் நான்கு என்றார். உடனே பார்வையாளர் தரப்பிலிருந்து எல்லோம் ஒன்றாக குரல்கொடுத்தனர், 'இன்னுமொரு சந்தர்ப்பம் கொடுங்கள்' என்று.

பெரும் ஆரவரங்களுடன் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக்கட்சிகளின் இந்தியப்பிரதமருக்கான கடித விவகாரம் வெற்றியுடன் முடிந்ததைப்பற்றி பலரும் மகிழ்ச்சி தெரிவித்து வந்திருந்தனர்.

உண்மைதான், வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாமே, (தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த) ஓரணியில் திரண்டு ஒர் ஆவணத்தை தயாரிக்க முடிந்தது மகிழ்ச்சிக்குரியதுதான்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த உதவுங்கள் என்று தமிழர் தரப்பில் ஒற்றுமையாக எல்லலோரும் சேர்ந்து இந்தியாவை கேட்கவேண்டும் என்று இலங்கை வந்துசென்ற இந்திய வெளியுறவுச் செயலர் பகிரங்கமாக கோரிக்கை விடுத்தார்.

உங்களுக்காக எங்களால் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றை நீங்களே நிராகரிக்கின்றபோது நாம் எப்படி அதனை அமுல்படுத்துங்கள் என்று இலங்கையைக் கேட்பது என்ற அவரின் கேள்வி நியாயமானதே.

அதனையடுத்து உடனடியாக களம் இறங்கிய ரெலோ கட்சி, பகிரங்க அழைப்பை விடுத்து ஒரு கூட்டத்ததைக் கூட்டியது. அதில் தமிழ் அரசு கலந்துகொள்ளாது என்பதை தெரிந்துகொண்ட ரெலோ, முஸ்லிம் காங்கிரஸையும் மனோ கணேசனையும் அழைத்துவந்தது. கூட்டத்திற்கு தலைமைதாங்க முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை அழைக்க, அவரோ அதில் சம்பந்தனின் பங்களிப்பு முக்கியம் என்று வலியுறுத்தினார். நடந்தவை எல்லாம் பலதடவை திரும்பத்திரும்ப கூறியாகிவிட்டது.

இப்போது அந்தக் கடிதத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய விடயங்கள் வெளியே தெரிய வந்திருக்கின்றன.

'ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டின் கீழ் தமிழ் பேசும் மக்கள் தமது வரலாற்றுச் சிறப்புமிக்க வாழ்விடப் பிரதேசங்களில் கௌரவமாகவும், சுயமரியாதையுடனும், அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழவும், அவர்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கவும் வழியேற்படுத்தப்படவேண்டும்.'

இதுதான் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ள முக்கிய சாராம்சம்.

சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க வழியேற்படுத்தப்பட வேண்டும் என்றால், அதன் ஆர்த்தம் 'விரும்பினால் பிரிந்து போகலாம்' என்பதும் தான். பிரிக்கப்படாத நாட்டிற்குள் பிரிந்து போகின்ற உரிமையுடன் கூடிய தீர்வு ஏற்படவேண்டுமாம்.

இது சத்திரசிகிச்சை வெற்றி ஆனால், நோயாளி மரணம் என்றதுபோல இருக்கின்றது.

இந்த வசனங்களைப் படித்த உடனேயே படிக்கின்ற இந்திய அதிகாரிகள் மேலே படிக்க வேண்டியதில்லை என்பதற்காக எழுதப்பட்ட கடிதம்போல தெரிகின்றது என்கிறார் ஒரு மூத்த இந்திய பத்திரிகையாள நண்பர்.

அவர் கேட்ட இன்னுமொரு கேள்விக்குத்தான் என்னால் பதிலளிக்க முடியவில்லை.

'இது என்ன இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் செய்யப்பட்ட ஒன்றா?' என்று அவர் கேட்டபோது பதில்சொல்ல முடியாமல் நான் இருந்தபோது, அவர் சொன்னார், 'இந்தியாவால் செய்யக்கூடிய ஒன்றை வலியுறுத்தியிருந்தால் இந்தியா அதற்காக இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்கும். அது இலங்கையை சங்கடத்தில் ஆழ்த்திவிடும், அவர்கள் சுயநிர்ணய உரிமையைத் தானே கேட்கிறார்கள். நீங்கள் பதின்மூன்றைக் கேட்கிறீர்களே என்று இலங்கை தரப்பில் பதில் கேள்வி கேட்கப்பட்டால் இந்தியாவிடம் பதில் இருக்காதல்லவா? என்று அவரே விளக்கமும் தந்தார்.

நமது தலைவர்கள் படு கில்லாடிகள்தான் என்று பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.!

**- ஊர்க்குருவி**

# சுழற்சி முறை மின்வெட்டு அட்டவணை வெளியானது

## வடக்கு மாகாணம் முழுவிவரம்

கொழும்பு, ஜன. 11

நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு மணிநேர மின்வெட்டு அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடு முழுவதும் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு மாலை 5:30 மணி முதல் இரவு 9:30 மணி வரை ஒரு மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மின்சாரம் தடைப்படும் நேரங்கள் வருமாறு,

| நேரம் | திங். | செவ். | புத. | வியா. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|
| 17.30 - 18.30 | ஏ | டி | சி | பி | ஏ | டி |
| 18.30 - 19.30 | பி | ஏ | டி | சி | பி | ஏ |
| 19.30 - 20.30 | சி | பி | ஏ | டி | சி | பி |
| 20.30 - 21.30 | டி | சி | பி | ஏ | டி | சி |

**ஏ பிரிவில் -** கிளிநொச்சி - 3 (பரந்தன் சந்தி தொடக்கம் கௌதாரிமுனை வரை, பரந்தன் சந்தி - புளியம்பொக்கணை வரை, தருமபுரம், விசுவமடு, தேராவில், புதுக்குடியிருப்பு, மாத்தளன், கரைச்சிகுடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், சிலவாத்தை - கொக்கிளாய் வரை, உமையாள்புரம், ஆனையிறவு, இயக்கச்சியின் ஒரு பகுதி),

வவுனியா 1 (பூந்தோட்டம், வைரவப்புளியங்குளம், பட்டாணிச்சூர், குருமண்காடு, வேப்பங்குளம், குளுமாட்டு சந்தி, கூமாங்குளம், நெளுக்குளம், சாம்பல்தோட்டம், பாரதிபுரம், விநாயகபுரம், ரேயாந்திரகுளம், நகரிலுப்பங்குளம், அருகம்புல்வெளி, அவுசதப்பிட்டி, நவகம, பழையனூர், உளுக்குளம்.

**பி பிரிவு**

சுன்னாகம் - 12 (சுன்னாகம், ஏழாலை, குப்பிளான், கட்டுவன், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், உப்புமடம், தாவடி, சுதுமலை, கொக்குவில், குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நாவலடி, அட்டகிரி, திருநெல்வேலி, பூநாறி சந்தி, உரும்பிராய், இணுவில், கோப்பாய், கோண்டாவில், ஊரெழு, கரந்தன், நீர்வேலி, அச்செழு, சிறுப்பிட்டி, இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், நாயன்மார்கட்டு, அரியாலை, செம்மணி, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, வாகையடி.

கிளிநொச்சி 6 (மாங்குளம், வன்னிவிளான்குளம், அம்பாள்புரம், செல்வபுரம், ஊடறுத்தகுளம், மூன்றுமுறிப்பு, பாண்டியன்குளம், பொங்கர் பூவரசன்குளம், விநாயகபுரம், அனிச்சன்குளம், மல்லாவி, யோகபுரம், தேராங்கண்டல், தெனியன்குளம், துணுக்காய், கல்விளான்.

வவுனியா - 3 (வவுனியா நகரின் ஒருபகுதி, ரம்பைக்குளம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்தகுளம், ஈரப்பெரியகுளம், கற்குடாமடு, அளுத்கம, பூ-ஓயா, பாகல அளுத்வத்தை, தவசிக்குளம், குட்செட் வீதி, பண்டாரிகுளம், கோவில்குளம், சமணங்குளம், ஆச்சிபுரம், முருகனூர், கல்நாட்டியன்குளம், ஆசிகுளம், கற்குளம், சிதம்பரபுரம், வெளிகுளம் தொடக்கம் துட்டுவெவ வரை.

வவுனியா - 6 (துட்டுவெவ தொடக்கம் தாண்டிக்குளம் வரை, பத்தினியார்மகிழங்குளம் தொடக்கம் மணிபுரம் வரை, சுந்தரபுரம், சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம் தொடக்கம் ஈஸ்வரிபுரம் வரை, கல்மடு, காகாயன்குளம், கோவில்புளியங்குளம், இரணையிலுப்பங்குளம், பரசன்குளம், சின்னவாளையன்கட்டு, கோகெலிய, ஓமந்தை, புளியங்குளம், மாமடு தொடக்கம் போக்ஸவெவை.

**சி பிரிவு**

சுன்னாகம் - 8 ( ஆறுகால்மடம், நாவாந்துறை, வில்லூன்றி, பண்ணை, கோம்பையன்மணல், கொட்டடி, கொய்யாதோட்டம், ஆஸ்பத்திரி சந்தி கே.கே.எஸ் வீதி, 1, 2, 3ஆம் குறுக்குத்தெரு வீதிகள், குருநகர், மண்டைதீவு, மண்கும்பான், அல்லைப்பிட்டி, சோளவத்தை.

சுன்னாகம் - 7 (சண்டிலிப்பாய், சங்கானை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, ஜம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம், சேந்தான்குளம், சுழிபுரம், தொட்டிலடி, வட்டுக்கோட்டை, மூளாய், அராலி, பொன்னாலை, காரைநகர், தோப்புக்காடு, ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல், துறையூர், இறுப்பிட்டி, புங்குடுதீவு, குறிகாட்டுவான், வேலணை.

கிளிநொச்சி - 2 (ஜெயந்திநகர், செல்வாநகர், கண்ணகைபுரம், அம்பாள்குளம், உருத்திரபுரம், கோணாவில், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள்குளம், முறிகண்டியின் ஒரு பகுதி, அக்கராயன்குளம் தொடக்கம் வன்னேரிக்குளம் வரை, ஜெயபுரம் தொடக்கம் வலைப்பாடு வரை, பல்லவராயன்கட்டு தொடக்கம் வெள்ளாங்குளம் வரை.

மன்னார் 2 ( அந்தணன்குளம் தொடக்கம் பல்லாமடு வரை, வண்ணாமோட்டை தொடக்கம் பள்ளிவாசல்பிட்டி வரை, உயிலங்குளம் தொடக்கம் முருங்கன்வரை, அடம்பன் தொடக்கம் திருக்கேதீஸ்வரம் வரை, முருங்கன் தொடக்கம் சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், முருங்கன்பிட்டி தொடக்கம் நறுவிலிகுளம் வரை.

**டி பிரிவு**

சுன்னாகம் - 9 (நாவற்குழி, கைதடி, மறவன்புலவு, அறுகுவெளி, மட்டுவில், நுணாவில், கல்வயல், சரசாலை, சாவகச்சேரி நகரம், கச்சேரி, அரசடி, அல்லாரை, கற்பேலி, வெள்ளம்போக்கடி, மீசாலை, கொடிகாமம், வரணி, நாவலடி, மிருசுவில், எழுதுமட்டுவாழ்.

சுன்னாகம் - 10 (நிலாவரை, சிறுப்பிட்டி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, தொண்டைமானாறு, கெருடாவில், அக்கரை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, புறாப்பொறுக்கி, மாண்டான், பொலிகண்டி, நெடியகாடு, நெல்லியடி, கரவெட்டி, தாமரைக்குளத்தடி, யாக்கரு, திக்கம், வதிரி, இரும்புமதவடி, மாலை சந்தி, வியாபாரிமூலை, பருத்தித்துறை நகரம், மந்திகை, வல்லிபுரம்.

கிளிநொச்சி - 1 (கிளிநொச்சி நகரம், பரந்தன், இரத்தினபுரம், வட்டக்கச்சி தொடக்கம் இரணைமடு.

வவுனியா -2 (நெளுக்குளம் தொடக்கம் பறனாயங்குளம் வரை, புலிதரித்தபுளியங்குளம் தொடக்கம் செக்கடிபுலவு வரை, பிராமணன்குளம் தொடக்கம் பெரியதம்பனை, பெரியபண்டிவிரிச்சான் தொடக்கம் மடு வரை, தட்சினாமருதமடு தொடக்கம் பெரியமடுவரை, ஈச்சிலவாக்கை தொடக்கம் பள்ளமடுவரை, விடத்தல்தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரை, வெள்ளாங்குளம் தொடக்கம் கணேசபுரம்வரை. (ஐ)

# பட்டிதிடல் பகுதியில் பஸ்- டிப்பர் விபத்து!

## 26 பேர் காயம்

திருமலை, ஜன. 11

திருகோணமலை, மூதூர் பட்டிதிடல் பகுதியில் நேற்றுக் காலை பஸ் - டிப்பர் மோதி விபத்துக் குள்ளான தில் 26 பேர் காயமடைந்துள் ளனர்.

அம்பாறையிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஸும், மூதூரிலிருந்து சேருவில நோக்கிப் பயணித்த டிப்பர் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



இரு வாகனங்களின் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu
11.01.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஆங்சான் சூகியின் கதை சொல்லும் செய்தி?

மியன்மாரின் முன்னாள் ஜனாதிபதியும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான் சூகிக்கு, அந்நாட்டின் இராணுவ ஆட்சியாளர்கள், நான்கு வருட சிறைத்தண்டனை விதித்திருக்கின்றனர். நீண்டகாலமாக இராணுவ ஆட்சியின் பிடியிலிருந்த மியன்மாரில், 2015இல், மீண்டும் ஜனாநாயக ஆட்சி உறுதிசெய்யப்பட்டது. ஆங்சான் சூகியின் கட்சி, தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை பெற்று ஆட்சியமைத்தது. இதே 2015இல்தான், இலங்கையிலும் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டிருந்தது. மியன்மாரில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நீண்ட காலமாக வெளியுலக தொடர்பில்லாதிருந்த சூகி, மேற்கு உலகுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். ஆங்சான் சூகியின் ஜனநாயகத்திற்கான பங்களிப்பை கௌரவிக்கும் வகையில், அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், கடந்த ஆண்டு மியன்மார் மீளவும் இராணுவ ஆட்சியாளரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. மியன்மாரில் தேர்தல்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் அங்கு விஜயம் மேற்கொண்டு ஆங்சான் சூகிக்கு முழுமையான ஆதரவை தெரிவித்திருந்தார். இப்போது மீளவும் அமெரிக்கா உட்பட மேற்குலகம் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கும் போது, சூகி அவரின் முன்னைய சிறை வாழ்க்கைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்.

சர்வதேச சமூகம் தொடர்பிலும், சர்வதேச அழுத்தங்கள் தொடர்பிலும் எமது சூழலில் அதீத நம்பிக்கையும் ஆசையும் வெளிப்படுத்தப்பட்டுவரும் சூழலில்தான் மறுபுறம் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றிருந்த ஓர் ஆசியத் தலைவர் இராணுவ ஆட்சியாளரால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார். இது நமக்கு உணர்த்தும் செய்தி என்ன? சர்வதேச தலையீடுகள் என்பதற்கு ஒரு மட்டுப்பாடு உண்டு. ஏனெனில், இது யுத்தம் அல்ல - வல்லரசுகள் இராணுவ ரீதியான தலையீடுகளை செய்வதற்கு. அவ்வாறானதொரு தலையீட்டைத்தான் அன்று இந்தியா மேற்கொண்டது. தமிழர் தாயகத்தில் உருவாகிய ஆயுத இயக்கங்களை வளர்த்துவிட்டது. அதன் மூலம் இலங்கையில் தலையீட்டை மேற்கொண்டது.

இதன் அடிப்படையில் வந்ததுதான் மாகாண சபை முறைமை. இந்தியா இராணுவ ரீதியான முடிவை மேற்கொண்டபோது, புதுடில்லியில் அதற்கு எதிரான பார்வைகளும் இருந்தன. ஒரு நட்பு நாட்டின்மீது இவ்வாறானதோர் இராணுவ தலையீட்டை செய்யக் கூடாதென்றும் சிலர் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். அப்போது, இந்திரா காந்தியின் மூலோபாய ஆலோசகராக இருந்த பி. என். ஹக்ஸர் கூட, இது தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயத்தையே கொண்டிருந்தார். எனினும், வேறு என்ன வழியில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவை வழிக்கு கொண்டு வருவது என்னும் கேள்விக்குப் பதிலிருக்கவில்லை. பெரும்பாலானவர்களின் தெரிவு இராணுவ ரீதியானதாகவே இருந்தது.

ஆனால், இப்போது நிலைமைகள் முற்றிலும் வேறானது. இன்றைய சூழலில் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் என்பவை, கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதல்ல. அனைத்துமே பரிந்துரைகளாகவே இருக்கின்றன. அதேவேளை சிங்கள ஆட்சியாளர்கள் அதனை பொருட்படுத்தாது விட்டால், பாரதூரமான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளப் போவதில்லை. எனவே, ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அனைத்து அழுத்தங்களினதும் இலக்கு, கொழும்பில் ஒரு சுமுகமான அரசாங்கத்தை அமைப்பதில்தான் முடிவுறும். எனவே, சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் அளவுக்கதிகமான கற்பனைகளை மேற்கொள்வது தவறானது.

# ஐரோப்பிய நாடுகளிலும் அதிகரிக்கும் பணவீக்கம்

பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியை உள்ளடக்கிய ஐரோப்பிய நாடுகளில் நுகர்வோர் விலைகள், முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில், டிசெம்பரில் 5 சதவீதம் உயர்ந்துள்ளது.

யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 19 நாடுகளில், பணவீக்கம் அதன் அதிகபட்ச அளவை எட்டியதால், உணவு மற்றும் எரிசக்தி செலவுகள் அதிகரித்து வருவதாக, வெள்ளியன்று வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

**❝யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் 19 நாடுகளில், பணவீக்கம் அதன் அதிகபட்ச அளவை எட்டியதால், உணவு மற்றும் எரிசக்தி செலவுகள் அதிகரித்துள்ளன.**



ஐரோப்பிய ஒன்றியத்தின் புள்ளியியல் அலுவலகமான யூரோஸ்டாட்டின் கூற்றுப்படி, ஐரோப்பிய ஒன்றியப் பொருளாதாரங்களான பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியை உள்ளடக்கிய குதியில் நுகர்வோர் விலைகள், முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில், டிசெம்பரில் 5 சதவீதம் உயர்ந்துள்ளது.

எரிசக்தி விலைகள் பணவீக்க அதிகரிப்புக்கு வழிவகுத்தது, இது கடந்த ஆண்டை விட 26 சதவீதம் உயர்ந்தது. உணவுப் பொருட்களின் விலை உயர்வு நவம்பரின் 2.2 சதவீதத்தில் இருந்து 3.2 சதவீதமாக உயர்ந்தது. மேலும் பொருட்களின் விலை 2.9 சதவீத வேகத்தில் உயர்ந்தது.

இருப்பினும், சேவைகளுக்கான விலை அதிகரிப்பு 2.4 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது, இது கோவிட் 19 இன் ஒமைக்ரான் மாறுபாடு விடுமுறை பயணத்திற்கான தேவையை குறைக்கிறது என்று பரிந்துரைக்கிறது.

உணவு மற்றும் ஆற்றல் போன்ற பொருட்களை அகற்றிய பிறகு, முக்கிய பணவீக்க விகிதம் 2.6 சதவீதத்தில் நிலையாக இருந்தது.

தொற்றுநோயிலிருந்து பொருளாதார மீட்சியானது, ஆற்றலுக்கான தேவையை அதிகரித்து, உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை சீர்குலைத்துள்ளதால், மளிகைக் கடையில் உள்ள உணவு முதல் எரிபொருள் வரை அனைத்திற்கும் அதிக செலவாகும்.

தொற்றுநோயின் ஆழத்திலிருந்து மீண்டு வரும் பொருளாதாரத்தைத் தூண்டுவதற்கு வட்டி விகிதங்களை மிகக் குறைவாக வைத்திருப்பதால், பணவீக்கத்தில் செயல்பட ஐரோப்பிய மத்திய வங்கிக்கு அழுத்தம் கொடுக்கிறது.

ஒமைக்ரோனின் வருகை பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய எந்த முடிவுகளையும் மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது, மேலும் ஆய்வாளர்கள், ஐரோப்பிய வங்கி 2023 வரை விகிதங்களை உயர்த்தும் என்று எதிர்பார்க்கவில்லை.

பணவீக்கம் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரச்சனை மட்டுமல்ல. அமெரிக்காவில் நுகர்வோர் விலைகள் 39 ஆண்டுகளில் இல்லாத வேகத்திலும், பிரிட்டனில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மிக அதிக அளவில் உயர்ந்துள்ளன. துருக்கிய பணவீக்கம் கடந்த மாதம் 36 சதவீதத்தை எட்டியது - இது 19 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்சம் - மேலும் பிரேசில் 18 ஆண்டுகளில் மிக வேகமாக 10 சதவீதத்திற்கும் அதிகமான வேகத்தைக் கண்டது.

ஒமைக்ரோன் அதிகரிப்பு மற்றும் உலகப் பொருளாதாரத்தில் அதன் நிச்சயமற்ற விளைவுகள் இருந்தபோதிலும், மத்திய வங்கிகள் உயரும் பணவீக்கத்தை எதிர்த்து அல்லது அந்த திசையில் நடவடிக்கைகளை எடுக்க வட்டி விகிதங்களை உயர்த்தி வருகின்றன.

தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து வட்டி விகிதங்களை உயர்த்திய ஒரு பெரிய மேம்பட்ட பொருளாதாரத்தின் முதல் மத்திய வங்கியாக கடந்த மாதம் இங்கிலாந்து வங்கி ஆனது. ஐரோப்பிய மத்திய வங்கி மிகவும் எச்சரிக்கையான அணுகுமுறையை எடுத்துள்ளது, ஆனால் அடுத்த வருடத்தில் அதன் சில தூண்டுதல் முயற்சிகளை கவனமாக திரும்பப் பெறவும் முடிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் நுகர்வோர் விலைகள் 6.8 சதவீதம் உயர்ந்துள்ளதால், அமெரிக்க மத்திய வங்கி கடனை, இறுக்கமான ஐரோப்பாவை விட வேகமாக நகர்கிறது.

**எக்ஸ்பிரஸ்**

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 11 செவ்வாய்க்கிழமை**
**பிலவ வருடம் - மார்கழி - 27**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 3.00 - 4.30**
**திதி : நவமி**




**மேடம்**
உங்களது திறமை, உழைப்பை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். உறவினர்கள் தரும் ஆலோசனைகளை பின்பற்றுவது நல்லது. உங்களது பலவீனங்களை பட்டியலிட்டு மாற்றிக் கொள்வீர்கள்.

**இடபம்**
வாகனங்களைப் புதுப்பிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள். எந்தவொரு முக்கிய விஷயத்திலும் அலட்சியம் காட்ட வேண்டாம். சில விஷயங்களில் பெருந்தன்மையான முடிவு எடுப்பீர்கள்.

**மிதுனம்**
கல்வியாளர், அறிஞர்களின் நட்பால் நன்மை வரும். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணிச்சுமை கூடும். கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

**கடகம்**
பணியாளர்களுக்கு அலைச்சல் அதிகரிக்கும். சுபச்செலவு ஏற்படும். பேச்சு, செயலில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பரபரப்பான நாள்.

**சிம்மம்**
சுபநிகழ்ச்சியை முன்னின்று நடத்துவீர்கள். உங்களின் செல்வாக்கு கூடும். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். அன்பால் வெற்றி காண்பீர்கள். கூடுதல் உழைப்பால் நற்பலன் பெறுவீர்கள். கவலை தீரும்.

**கன்னி**
எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. உங்களது வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். திருமணம் கூடி வரும். அரசால் ஆதாயம் உண்டு.

**துலாம்**
நீண்ட காலமாக பார்க்க நினைத்த ஒருவரை இன்று சந்திப்பீர்கள். உழைத்தும் ஆதாயம் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் தீரும். பழைய நண்பர்களின் சந்திப்பு மனதிற்கு மகிழ்ச்சியை தரும்.

**விருட்சிகம்**
உங்களது பிடிவாதத்தால் நெருக்கடி ஒன்றைச் சந்திக்க நேரிடும். யாரிடமும் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். எதிர்காலம் பற்றி யோசித்து நல்ல முடிவு ஒன்றை எடுப்பீர்கள்.

**தனுசு**
பிறரது பிரச்னை ஒன்றைத் தீர்த்து வைத்து நிம்மதி அடைவீர்கள். எந்தவொரு விஷயத்திலும் அவசரப்பட்டு முடிவெடுக்காதீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபவிஷயம் ஒன்று கூடி வரும்.

**மகரம்**
சிறிய வாய்ப்பாக இருந்தாலும் அதை பயன்படுத்துங்கள். புதிய நிறுவனத்திற்கு மாற அவசரம் காட்ட வேண்டாம். மனசாட்சிக்கு விரோதமான செயல்கள் எதையும் செய்யமாட்டீர்கள்.

**கும்பம்**
வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உற்சாகம் வரும். சோதனைகளையும் சாதனைகளாக்கி முன்னேறுவீர்கள். புதிய திட்டங்களை அமைத்து முன்னேறத் தொடங்குவீர்கள்.

**மீனம்**
கவலையில் இருந்து விடுபட்டு நிம்மதி அடைவீர்கள். தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் இப்போது கூடி வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். கவலையளித்த விஷயம் ஒன்று நல்லபடியாக முடிந்து நிம்மதி தரும்.

# உளவுத்துறையின் எச்சரிக்கையை அடுத்து இராமேஸ்வரம் கோயிலில் கடும் பாதுகாப்பு

இராமேஸ்வரம், ஜன. 11

உளவுத்துறையின் எச்சரிக்கையைத் தொடர்ந்து இராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான கோயில்களில் இராமேஸ்வரம் இராமநாதசாமி கோயிலும் ஒன்றாகும். ஏற்கனவே இராமேஸ்வரம் கோயிலுக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் உள்ளதால் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாகவே கோயிலின் நான்கு வாசல் பகுதிகளிலும் 24 மணி நேரமும் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நான்கு ரத வீதிகள் வழியாக முக்கிய பிரமுகர்கள் வாகனத்தை தவிர எந்த ஒரு வாகனமும் அனுமதிக்கப்படுவதில்லை, இந்தநிலையில் இராமேஸ்வரம் கோயிலுக்கு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் இருப் பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்தாக கூறப்படுகின்றது.

அதனை தொடர்ந்து இராமேஸ்வரம் கோயிலில் கடந்த சில நாட்களாகவே தற்போது இருப்பதை விட கூடுதலாக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. குறிப்பாக கோயிலின் கிழக்கு வாசல் பகுதியில் வெடிகுண்டு தடுப்பு பிரிவு உள்ளிட்ட பொலிஸார் கூடுதலாக தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதுபோல் அவ்வப்போது கோயிலின் அனைத்து பிரகாரங்களிலும் பொலிஸாரும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் கோயிலின் மேல் பகுதி மற்றும் ரத வீதிகளிலும் பொலிஸார் கண்காணிப்பு கமெராக்கள் மூலமும் சந்தேகப்படும்படியான நபர்கள் யாரும் சுற்றி திரிகின்றனரா என்பது குறித்து கண்காணித்து வருகின்றனர்.

# பிரதமர் மோடியின் தமிழக வருகை இரத்து; காணொலி மூலம் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

சென்னை, ஜன. 11

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக வரும் 12ஆம் திததி தமிழகம் வரவிருந்த பிரதமர் மோடியின் வருகை ரத்தாகியுள்ளது.

தமிழகத்தில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட புதிய மருத்துவக் கல்லூரிகள் திறப்பு விழா நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொண்டு கல்லூரிகளைத் திறந்துவைக்க பிரதமர் மோடி ஜனவரி 12ஆம் திகதி தமிழகம் வரவிருந்தார். விருதுநகரில் பிரதமர் மோடி கலந்துகொள்ள இருக்கும் நிகழ்ச்சி ஒன்றில் முதல்வர் ஸ்டாலினும் கலந்துகொள்ள இருப்பதாகக் கூறப்பட்டது.

அதிகரித்து வரும் கொரோனா பரவல் காரணமாக பா.ஜ.க. நிகழ்ச்சிகளில் பிரதமர் மோடி கலந்துகொள்ள மாட்டார் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஏற்கெனவே தெரிவித்துள்ளார். தற்போது, பிரதமரின் தமிழக வருகை ரத்து செய்யப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகத்தையும், தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளையும் வரும் ஜனவரி 12ஆம் திததி காணொலிக் காட்சி மூலம் பிரதமர் மோடி திறந்து வைக்கவுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரியார் சிலையை அவமதிப்பவர்களை தண்டிப்பதில் மெத்தனம் வேண்டாம்

## முதலமைச்சருக்கு கி.வீரமணி வேண்டுகோள்

சென்னை, ஜன. 11

பெரியார் சிலையை அவமதிப்பவர்களைத் தண்டிப்பதில் மெத்தனம் வேண்டாம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளலூரில் தந்தை பெரியார் சிலைக்கு சனிக்கிழமை இரவுஅடையாளம் தெரியாத சிலர் செருப்பு மாலை போட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அப்பகுதியில் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராவைக் கொண்டு காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இச்சம்பவத்திற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம் தெரிவிக்கையில். தந்தை பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாள் என்றும், இந்த அரசு பெரியார் கொள்கை வழி செயல்படும் அரசு என்றும், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அதிகாரபூர்வமாக அறிவித்திருப்பதும், சமூக நீதியில் நமது முதல்வர் தொடர்ந்து செய்து வரும் சாதனைகள் இந்தியா முழுவதும் பாராட்டப்படுவதுமான ஒரு காலகட்டத்தில், தந்தை பெரியார் சிலை அவமதிக்கப்படுவதை இணைத்துப் பார்க்க வேண்டும். முதல்வர் - முக்கியமாக இதில் கவனம் செலுத்தி, குற்றவாளிகள் - அதன் பின்னணியில் இருப்பவர்கள் மீதான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கி.வீரமணி தெரிவித்தார்.


எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**காளிமாதா ஜோதிட நிலையம்**





**இந்திய பிரபல்யமான பாரம்பரிய**

**கண்ணன் பொதுவாழ்தாஸ்**

ஜாதம், கைரேகை பார்த்து பலன் சொல்லுதல், கணவன் மனைவி சண்டை, காதல் பிரிவு, திருமண அக்கறையின்மை, வேலை தொழில் உத்தியோகம் போன்ற பிரச்சினையின்மை செய்வினை, சூனியம் போன்றமையால் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் விரட்டப்படுதல் போன்ற பிரச்சினைகளையும், கண் திருஷ்டியால் வாழ்வில் முன்னேற்றமின்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும் வேண்டிய வழிகளைக் காட்டுதல், வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்புகள், சிறந்த கல்வி மேம்பாடு ஆகியவற்றுக்கும் பலன் சொல்வதோடு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல் செய்தல் போன்றவற்றையும் செய்வார்.

**நேரம்: காலை 8.00 - இரவு 7.00**

**இல.109, மட்டு நகர் வீதி, கல்முனை**
**அர்ச்சனா ஜுவலரி அருகாமையில் (தேசிய சேமிப்பு வங்கி எதிர்ப்பக்கமாக)**
**075 217 1943**

# தேசிய அரசு அமைக்கப்பட்டால் தலைமை வகிக்க ரணில் தயார்

## ஐ.தே.க. பிரதித் தலைவர் கூறுகிறார்

**கொழும்பு, ஜன. 11**

**நல்லெண்ண அடிப்படையில் அரசு, தேசிய அரசொன்றை அமைக்குமானால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்கும் என்று அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.**



தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசொன்றை அமைத்தால் அதற்கு எதிரணிகளின் ஒத்துழைப்பையும் பெறலாம். அவ்வாறு அமையும் தேசிய அரசுக்கு தலைமை வழங்குவதற்கு ரணில் தயாராகவே இருக்கின்றார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பொருளாதாரப் பிரச்னையால் நாட்டிலுள்ள வளங்களை இந்த அரசு விற்பனை செய்துவருகின்றது. அரசு வசமுள்ள தங்க இருப்பும் குறைவடைந்துள்ளது. பொருளாதாரப் பிரச்னைக்கான தீர்வுகள் இவை அல்ல. உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அதற்கான யோசனைகள் ஐக்கிய தேசியக்கட்சி வசம் உள்ளன. "-என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தற்போதுள்ள உரப் பிரச்சனைக்கு விவசாய அமைச்சரே பொறுப்பு

## அடித்துச் சொல்கிறார் தயாசிறி



கொழும்பு, ஜன. 11

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டால் அதனைச் சுட்டிக்காட்டி பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, தற்போது நிலவும் உர நெருக்கடிக்கு அமைச்சரே பொறுப்பேற்கவேண்டும் என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஒரு அறுவடை காலத்துக்குள் உரம் தொடர்பான புதிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்துள்ளார்.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர், அதனை செய்ய முடியாதென்பதை சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், விடய அமைச்சர் இணங்கி புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

பெரும்போகத்தில் உரங்களை வழங்க முடியாவிட்டால் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. விவாதங்கள் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர்கள் இது குறித்து விவாதித்தனர்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக அல்ல, தீர்வுகளை காண்பதற்காகவே தனித்தனியாக இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம்-என்றார். (அ)

# காகிதங்களுக்கும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 11

பல்வேறு அத்தியாவசிய பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் செய்தித்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தும் காகிதங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

செய்தித்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் காகிதங்களின் தட்டுப்பாடு காரணமாக தற்போது சகல பத்திரிகை தொழிற்துறையினரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

டொலர் தட்டுப்பாடு மற்றும் உலகளவில் காகிதங்களின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்பன இதற்கு பிரதான காரணங்களாகும் என பத்திரிகை தொழிற்துறையினர் தெரிவித்தனர்.

இதன் காரணமாக செய்தித்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் காகிதங்களின் விலையானது, கடந்த மாதத்தை காட்டிலும் இந்த மாதம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு தொன் காகிதம் 450 அமெரிக்க டொலராக காணப்பட்ட நிலையில், தற்போது, 800 அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், செய்தித்தாள்களின் உற்பத்தி செலவினம் அதிகரித்துள்ளதுடன், பத்திரிகை தொழிற்துறையினர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். (அ)

# கொழும்பு கடற்கரைகளில் அதிகரித்துள்ள முதலைகள்

கொழும்பு, ஜன. 11

வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிஸை மற்றும் காலிமுகத்திடல் கடற்பகுதிகளில் 3 முதலைகள் அவதானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் காலிமுகத்திடல் கடற்பகுதியில் முதலை ஒன்று அவதானிக்கப்பட்டுள்ள நிலையில், அது தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் நபர் ஒருவர் உயிரிழப்பதற்கு காரணமான முதலை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்றாம் திகதி தெஹிவளை, ரயில் நிலையத்திற்கு அருகில் முதலை தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

எவ்வாறாயினும், தெஹிவளை கடற்பகுதியில் பிரவேசித்த முதலை இன்னும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் பிடிக்கப்படவில்லை.

குறித்த முதலை 12 அடி நீளமுடையது என அவதானிக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளவத்தையில் கண்டறியப்பட்ட முதலை 7 முதல் 8 அடி நீளம் கொண்டது என தெரியவந்துள்ளது. (அ)

# பகலில் மின்வெட்டு இல்லை

'கொழும்பு, ஜன. 11

பகல் வேளையில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான அவசியமில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

5 நாட்களுக்கு போதுமான எரிபொருள் இதுவரை கையிருப்பிலுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க குறிப்பிட்டார். நிலக்கரி இறக்குமதிக்கான விலைமனு கோரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, நேற்று முதல் நாளாந்தம் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு நேற்று முன் தினம் அறிவித்தது.

மின்வெட்டை குறைத்துக்கொள்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும் என சபையின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (அ)

# வனவள, வனஜீவராசிகள் திணைக்களங்களின் வசமிருந்த காணிகளை விடுவிக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸின் கோரிக்கைக்கு அரசு சாதகமான பதில்!

கிளிநொச்சி, ஜன. 11

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் காணிகளை பயிர்ச்செய்கை மற்றும் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளுக்காக விடுவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திணைக்கள அதிகாரிகள் காணிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளின் கீழிருக்கும், முன்னர் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு பின்னர் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட காணிகள் தொடர்பான விபரமான பட்டியலுடன், மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் அவற்றை விடுவிப்பதற்கான கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சமர்ப்பித்திருந்தார்.

இதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளை ஏற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இவை பற்றி ஆராய்ந்து பொருத்தமான காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு காணி அமைச்சரைப் பணித்திருந்தார்.

இதன் பிரகாரம், காணிகளைப் பார்வையிட்டு அவற்றை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் உயரதிகாரிகள் கிளிநொச்சிக்கு வருகை தந்து களப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் வை.தவநாதன் மற்றும் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் ஆகியோரின் தலைமையில், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுடன் மேற்படி அதிகாரிகள் விடுவிக்குமாறு கோரப்பட்ட காணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின்கீழ், பொன்னகர், கண்ணகைபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளிலும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஜெயபுரம், பண்டிவெட்டி, கரியாலை நாகபடுவான், திக்குவில், பள்ளிக்குடா ஆகிய பகுதிகளிலும் உள்ள காணிகளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் செயலக அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்ட வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அவற்றில் விடுவிக்கப்படக்கூடிய காணிகள் பற்றி விரிவாக ஆராய்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிக்கையிட்டனர்.

இதேபோல், கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் புளியம்போக்கணை, கல்மடு ஆகிய பகுதிகளுக்கும், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கோவில்வயல் பகுதிக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணைப்பாளர் வை.தவநாதன் தலைமையில் செயலக அதிகாரிகளுடன் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்தக் காணிகளை விடுவிக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் தொடர் பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிக்கையிட்டனர்.

ஆனைவிடுந்தான், கண்ணகைபுரம், கரியாலைநாகபடுவான் ஆகிய பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கும், பள்ளிக்குடா பகுதியில் புல் வளர்த்து கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் அனுமதிக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்துள்ள அதிகாரிகள், ஏனைய கோரிக்கைகள் குறித்து மேலதிகாரிகளுடன் கலந்துரையாடி காலக்கிரமத்தில் அவற்றை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக அறிக்கையிடுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் உறுதியளித்தனர்.

முன்னதாக, ஜெயபுரம் பகுதியில் 130 ஏக்கர் காணியை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவித்து நெற்செய்கை மேற்கொள்வதற்காக காணிகளற்றவர்களுக்கு வழங்கியிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கௌதாரிமுனைப் பகுதியிலுள்ள சுமார் 100 ஏக்கர் அரச காணியை அந்தப் பகுதியிலுள்ள காணிகளற்றவர்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்ததுடன், நீண்டகாலம் தனியாரின் அத்துமீறிய ஆக்கிரமிப்பின்கீழிருந்த ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக் காணியில் சுமார் 150 ஏக்கர் பகுதியில் தற்காலிகமாக காலபோகம் செய்வதற்கு அந்தப் பகுதியிலுள்ள காணிகளற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும்

## திகாம்பரம் எம். பி. உறுதி

கொழும்பு, ஜன. 11

நாங்கள் மக்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. மக்களுக்கான அரசியலையே நடத்தி வருகின்றோம். இனியும் நடத்துவோம். இந்த ஆட்சி விரைவில் கவிழும். சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும். அந்த ஆட்சியில் நாங்கள் அமைச்சராக இருப்போம். மக்களுக்கு பல சேவைகளை வழங்குவோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ராகலை, வலப்பனை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சூளுரைத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

நான் மக்களுக்காகவே அரசியல் செய்கின்றேன். மக்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் செய்வதில்லை. அப்படி செய்வதாக இருந்தால் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிவிட்டு சொகுசு வாகனங்களைப் பெற்றிருக்கலாம்.

அரசுக்கு வாக்களித்த மக்களே இன்று அரசுக்கு எதிராக திரும்பியுள்ளனர். ஆளுங்கட்சியில் உள்ளவர்கள்கூட ஆட்சியைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடும் நிலவுகின்றது. உர நெருக்கடியால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்டத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்‌ஷவே மீட்பாரென புகழாரம் சூட்டியவர்களே இன்று அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். 20 வருடங்களுக்கு இந்த அரசை அமைக்க முடியாதென மார் தட்டினர். ஆனால் 2 வருடங்களிலேயே ஆட்டம் கண்டுவிட்டது.

இப்படி நடக்குமென எமக்கு தெரியும். அதனால்தான் நாம் எதிரணி பக்கமே இருந்துகொண்டோம். எப்படியும் விரைவில் இந்த அரசு வீட்டுக்கு சென்றுவிடும். உடனே வீட்டுக்கு அனுப்பவும்கூடாது. இந்த ஆட்சியாளர்களின் பலவீனத்தை மக்கள் உணரவேண்டும். அப்போதுதான் இனியும் ஆசைவார்த்தைகளை நம்பி ஏமாறமாட்டார்கள்.

மலையகத்திலும் இராஜாங்க அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். அவரும் ஜனாதிபதியை கடவுள் என்றார். இப்போது 15 கிலோ கோதுமைமாவுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதையும் வரவேற்றுள்ளார். ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ மாவுக்கு வெறும் 40 ரூபாய் தான் நிவாரணம். வெட்கமின்றி இதனையும் வரவேற்கின்றனர். சின்ன பையனால் முடியாது என சொன்னோம். நீங்கள் ஒரு இலட்சம் வாக்குகளை வழங்கினீர்கள். இன்று நாங்கள் செய்த திட்டங்களை திறக்கும் திறப்பு விழாவைதான் நடத்தி வருகின்றனர்-என்றார்.

(அ)

# போதுமான அளவு தடுப்பூசி கைவசம்

கொழும்பு, ஜன. 11

நாட்டுக்கு தேவையான தடுப்பூசிகள் யாவும் முழுமையாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் நாட்டுக்கு நேற்றுவரை 4 கோடியே 85 இலட்சத்து 60 ஆயிரம் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் கிடைத்துள்ளதாகவும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அதற்கிணங்க நாட்டுக்கு கிடைக்கவேண்டிய முழுமையான அனைத்து தடுப்பூசிகளும் கிடைக்கப் பெற்று விட்டதாக அவர் கூறினார்.

முதல் இரு தடுப்பூசிகள் மட்டுமன்றி தேவையான பூஸ்டர் தடுப்பூசிகளும் முழுமையாக நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க இதுவரை அஸ்ட்ரா செனேகா,சினோபார்ம், ஸ்புட்னிக், மொடர்னா, மற்றும் பைசர் தடுப்பூசிகள் 4 கோடியே 80 லட்சத்து 60 ஆயிரமளவில் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சு.க. எம்.பிக்களை பெரமுன கறிவேப்பிலை ஆக்கிவிட்டது

## மைத்திரிபால சிறிசேன விசனம்



**கொழும்பு, ஜன. 11**

**சு.கவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் தேர்தலின் பின்னர் சு.க. பாராளுமன்ற உறுப்பினர்களை குழம்பில் உள்ள கறிவேப்பிலை போல் தூக்கி எறிந்துள்ளனர் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அவர்கள் நிறைவேற்றவில்லை. அத்தோடு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையின் நிபந்தனைகள் எதுவும் இன்று வரை நிறைவேற்றப்பட வில்லை. இதற்கு முன்னர் இவ் வாறான உணவுத் தட்டுப்பாடு நாட்டில் இருந்ததில்லை-என்றார். (அ)

# மலர்வளைய கட்டணமும் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 11

இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடையைய டுத்து இலங்கையில் மலர் வளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மலர் வளர்ப்பாளர்களும் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மலர்களை பெருமளவில் ஏற்றுமதி செய்தவர்கள்கூட தற்போது கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல சுப நிகழ்வுகளுக்கு மலர் பந்தல் அமைப்பதற்கான கட்டணமும் தறபோது அதிகரித்துள்ளது.

அதேவேளை, உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகக் கொண்டு செல்லப்படும் மலர் வளையங்களின் கட்டணமும் அதிகரித்துள்ளது என சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



# வலி. கிழக்கு பிரதேச சபை முன் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 11

பிரதேச சபைச் செயலாளரை அச்சுறுத்தியவரை கைது செய்ய கோரி வலி. கிழக்கு பிரதேச சபை முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் சட்ட விரோதமாக மதில் அமைக்கப்படுவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் பார்வையிட செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவ்விடத்துக்கு சென்றுள்ளனர்.

முறைப்பாட்டுடன் தொடர்புடையவர் செயலாளரை அச்சுறுத்தி அவரது கைத்தொலைபேசியை பறித்து உடைத்து அச்சுறுத்தி எடுத்துச் சென்றுள்ளார்.

அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. எனினும் குறித்த நபர் வெளிநாட்டுப் பிரஜை எனவும் தற்போது அவர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. குறித்த நபரை உடனடியாக கைது செய்யக் கோரியே நேற்று போராட்டம் நடத்தப்பட்டது. (அ-03)

# 2021 இல் இறக்குமதி அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 11

2021 ஆம் ஆண்டில் நாட்டின் இறக்குமதி 21.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு இறக்குமதி அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

2019 ஆம் ஆண்டில் இறக்குமதி 19.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியது. ஆனால் 2020 ஆம் ஆண்டில் அது 16.1 பில்லியனாக குறைந்துள்ளது என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக்காட்டினார். (அ)

# கோழி, முட்டை விநியோகம் ஏப்ரலில் சிக்கலுக்குள்ளாகும்

கொழும்பு, ஜன. 11

கோழி மற்றும் முட்டை விநியோகத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வது ஏப்ரல் மாதத்தில் சவாலாக இருக்கும் என அகில இலங்கை கோழிப்பண்ணையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை கோழிப் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர, கால்நடைத் தீவனப் பற்றாக்குறையே விநியோகத்தில் இடையூறு ஏற்படக் காரணம் எனத் தெரிவித்தார்.

டிசெம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கோழி மற்றும் முட்டைக்கான தேவை அதிகரிப்பதைக் குறிப்பிட்ட அவர், அதிகரித்த தேவைக்கு தாம் தயாராகவேண்டும் என்றும் கூறினார்.

எனவே தற்போது பற்றாக்குறையாக உள்ள கால்நடைத் தீவனத்தை இறக்குமதி செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கோழியின் விலை ரூ.670-690 வரை பராமரிக்கப்படுகிறது.

25 ரூபாயாக இருந்த முட்டையின் விலை தற்போது குறைந்து வருகிறது. அடுத்த வாரம் அரசாங்கத்துடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து கால்நடை தீவனத்தை இறக்குமதி செய்ய முடிந்தால், தேவைக்கு ஏற்ப விநியோகத்தை வழங்க முடியும் என்றும் குணசேகர கூறினார். (அ)

# வெற்றுப் போத்தலை கொடுத்தால் 10 ரூபாய்

## புதிய திட்டம் கொண்டுவந்தார் பந்துல

கொழும்பு, ஜன. 11

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் லங்கா சதொச நிறுவனம் புதிய தண்ணீர்ப் போத்தல் ஒன்றை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

நாட்டின் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களையும் இணைக்கும் விதமாக லங்கா சதொச நிறுவனம் இந்த செயல்பாட்டை முன்னெடுத்துள்ளது.

குடிதண்ணீர் போத்தல் ஒன்று 35 ரூபாய் என்றும் வெற்று போத்தலைத் திருப்பிக் கொடுத்தால் 10 ரூபாய் கிடைக்கும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.



சுற்றுச்சூழலில் சேர்க்கப்படும் பிளாஸ்ரிக்கின் அளவைக் குறைப்பதற்கு பங்களிக்கும் வகையில் இந்த திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

# சுதந்திரக்கட்சிக்கு பெரும் அநீதி இழைத்துள்ளார் மைத்திரிபால!

## ரோஹித அபேகுணவர்த்தன குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன. 11**

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு பெரும் அநீதி இழைத்துள்ளார் - என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சிறிலங்கா சுதந்திரக்கட்சியென்பது பாரிய பாரம்பரியக் கட்சியாகும். அந்தக் கட்சியை 2015 ஜனவரி மாதம் சிறிகொத்தவுக்கு கொண்டுசென்று, ஐக்கிய தேசியக் கட்சியிடம் அடகு வைத்தவர்தான் மைத்திரிபால சிறிசேன. அதனால்தான் சுதந்திரக்கட்சி சீரழிந்தது. அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் ஒரு முறை சஜித்திடம் சென்று, கட்சியை சரணடைய வைக்க பார்க்கின்றார். மைத்திரிபால சிறிசேனவும் ஜனாதிபதியாக இருந்தார். அவரை ஆட்சிக்கு கொண்டுவந்தவர்களே அவரை கடுமையாக விமர்சிக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியை பாதுகாக்க வேண்டுமெனில் அந்தக் கட்சியை முதலில் மைத்திரியிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் -என்றார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு; மைத்திரிபால கடுமையான எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 11

உள்ளூராட்சிசபைத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் திட்டத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

உள்ளூராட்சிச் சபைகளின் பதவி காலத்தை மேலும் ஒரு வருடங்களுக்கு நீடிப்பதற்கான அதிகாரம் துறைசார் அமைச்சருக்கு இருக்கின்றது. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி அவர் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடவுள்ளார்.

அவ்வாறு வெளியிட்டால் தேர்தலும் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்படும். இவ்வாறான தொரு பின்புலத்திலேயே தேர்தல் ஒத்திவைப்புக்கு மைத்திரி போர்க்கொடி தூக்கியுள்ளார்.(அ)





# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்டவர்களின் நினைவு யாழில்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டது.

மாநாட்டில் கொல்லப்பட்டவர்களில் நினைவாக, யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் வைபவத்தின்போது வன் முறைக் கும்பலொன்றினால் நடத்தப்பட்ட தாக்குதலில் மாநாட்டில் கலந்துகொண்ட 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-03)

# மக்களின் வாக்குகளை பெறுவதற்காக ஈஸ்டர் தாக்குதலை நடத்த அனுமதியா?

## கேள்வி எழுப்புகிறார் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜன. 11

மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஈஸ்டர் தாக்குதல்கள் நடத்தப்பட அனுமதிக்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு, முறையான நம்பிக்கையற்ற விசாரணையின் சமிக்ஞை அல்ல, மாறாக குற்றச்சாட்டுகள் மீதான முறையான நம்பிக்கையற்ற விசாரணையின் சமிக்ஞையாகும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகளின் தற்போதைய நிலை குறித்து, ஐரோப்பாவில் வாழும் இலங்கையர்களுடன் சூம் வழியாக நடந்த கலந்துரையாடலில் கர்தினால் இவ்வாறு கூறினார்.

அரசியல்வாதிகள் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை அழித்துவிட்டதாகக் கூறிய அவர், இந்த அமைப்பில் யாரையும் பாதுகாப்பாகவோ நியாயமானவர்களாகவோ கருத முடியாது என குறிப்பிட்டார்.

“சஹ்ரானை கைது செய்வதற்கான பிடியாணையை வைத்திருந்தபோதே பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா கைது செய்யப்பட்டார்.

முஸ்லீம் தீவிரவாதிகள் இதைத் தயார் செய்தது உண்மைதான். ஆனால், தெரிந்தே தகவல்களை மறைத்து மக்களின் வாக்குகளைப் பெறவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தாக்குதலுக்கு 60 வீதம் பொறுப்பு. இங்கு ஆட்சியில் இருப்பவர்கள் இதை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர். இந்த நபர்கள் விசாரணையிலிருந்து தகவல்களைப் பெற



விரும்பவில்லை”-என்றும் அவர் கூறினார்.

# கண்டாவளையில் பாலத்துடன் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜன. 11

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள வெளிக்கண்டல் பாலத்துடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார். மோட் டார் சைக்கிளில் பயணித்த ஒருவரே இவ்வாறு பலியாகி யுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தருமபுரத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து குறித்த பாலத்துடன் மோதுண்டுள்ளது.

இந்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய, கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் ரவீந்திரன் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வவுனியா தலைமை பொலிஸ் அதிகாரியாக ஜெயக்கொடி

வவுனியா, ஜன. 11

வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக றம்புக்கணை பொலிஸ் நிலையத்தில் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய ஜே. ஏ. ஏ. எஸ்.ஜெயக்கொடி நேற்று முற்பகல் 10.26 மணிக்கு சுபநேரத்தில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்

வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.மானவடு கடந்த புதன்கிழமை கொஸ்வத்தை பகுதிக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து அந்த வெற்றிடத்துக்கு ஜெயக்கொடி பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்டார் .

நேற்றைய இந்நிகழ்வில் சமயத்தலைவர்களின் ஆசியுடன் புதிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனது கடமைகளை ஆரம்பித்தார். (அ)

# ஏழை நாடுகளுக்கு கடனை வாரிக் கொடுத்து தனது வலையில் சிக்க வைக்கிறதா சீனா?

ஏழை நாடுகளுக்கு கடன் வழங்குவது தொடர்பாக சீனா விமர்சனங்களை எதிர்கொள்கிறது. சீனா கடன் கொடுத்த நாடுகள், தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிப்பதாகவும், அந்நாடுகள் பீய்ஜிங்கின் அழுத்தத்தால் எளிதில் பாதிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் அக்கருத்தை சீனா நிராகரிக்கிறது. தங்கள் பிம்பத்தை கெடுக்கும் வகையில், மேற்கு நாடுகளில் சிலர் இக்கருத்தை கூறி வருவதாகக் குற்றம் சாட்டுகிறது.

"சீனாவிடம் கடன் வாங்கியதன் விளைவாக ஒரு நாடு கூட "கடன் பொறி" என்று அழைக்கப்படும் சூழலில் சிக்கவில்லை" என்கிறது சீனா.

**சீனாவின் கடன்**

உலகின் மிகப்பெரிய கடன் வழங்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கான அதன் கடன்கள் கடந்த பத்தாண்டுகளில் சுமார் மூன்று மடங்கு அதிகரித்து, 2020ஆம் ஆண்டின் இறுதியில் $170 பில்லியனைத் தொட்டது. சீனாவின் ஒட்டுமொத்த கடன்கள், இந்த புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை விட அதிகமாக இருக்கலாம்.

அமெரிக்காவின் வில்லியம் ரூ மேரி பல்கலைக்கழகத்தில் உள்ள சர்வதேச மேம்பாட்டு அமைப்பான எய்ட் டேட்டாவின் ஆராய்ச்சி, வளரும் நாடுகளுக்கு சீனா வழங்கும் பாதி கடன்கள் கடன் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளது.

இது பெரும்பாலும் அரசாங்க குறிப்பிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறது, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், வங்கிகள், கூட்டு முயற்சிகள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு மாற்றப்படுகின்றன.

இப்போதும் 40 க்கும் மேற்பட்ட குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகள் தங்களின் மொத்த ஜிடிபியில் 10 சதவீதத்துக்கு மேலான கடன்களை சீனாவிடமிருந்து பெற்றுள்ளன.

ஜிபூட்டி, லாவோஸ், ஜாம்பியா, கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள், தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 20 சதவீதத்தை சீனாவிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளன.

சீனாவிற்கு செலுத்த வேண்டிய கடனில் பெரும்பகுதியான கடன்கள், ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் "பட்டுப் பாதை" திட்டத்தின் கீழ் சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், சுரங்கம் மற்றும் எரிசக்தி துறை சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

பிபிசி உடனான பேட்டியில், பிரிட்டனின் வெளிநாட்டு உளவு அமைப்பான எம் ஐ 6இன் தலைவரான ரிச்சர்ட் மூர், சீனா மற்ற நாடுகளை தன் கைக்குள் வைத் திருக்க கடன் பொறிகளை பயன்படுத்துவதாகக் கூறினார்.

சீனா மற்ற நாடுகளுக்குப் பணத்தைக் கடனாகக் கொடுக்கிறது, அந்நாடுகளால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத போது முக்கிய சொத்துக்களின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க வேண்டியதாகிறது - இக்குற்றச்சாட்டை சீனா நீண்டகாலமாக மறுத்து வருகிறது.

சீனாவை விமர்சிப்பவர்களால் அடிக்கடி குறிப்பிடும் ஓர் உதாரணம் இலங்கை. பல ஆண்டுகளுக்கு முன் சீன முதலீட்டுடன் ஹம்பந்தோட்டையில் ஒரு துறைமுகத் திட்டம் தொடங்கப்பட்டது.

சீன கடன்கள் மற்றும் சீன ஒப்பந்ததாரர்களைப் பயன்படுத்தி பில்லியன் கணக்கில் செலவழிக்கப்பட்ட திட்டம், எதார்த்தத்தில் சாத்தியமாக லாபம் ஈட்டக் கூடியது தான் என நிரூபிக்க முடியாமல் திணறி சர்ச்சையில் சிக்கியது இலங்கை. அது அந்நாட்டை பெருங்கடனில் ஆழ்த்தியது.

இறுதியாக, கடந்த 2017 ஆம் ஆண்டில், மேற்கொண்டு சீனா முதலீடு செய்வதற்கு ஈடாக, துறைமுகத்தில் 70% கட்டுப்பாட்டை சீன வணிகர்களுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு வழங்க இலங்கை ஒப்புக்கொண்டது.

பிரிட்டனைத் தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான சாதம் ஹவுஸ், துறைமுகத் திட்டத்தைப் பற்றிய பகுப்பாய்வில், "கடன் பொறி" கருத்து பொருந்துமா என கேள்வி எழுப்பியுள்ளது. இந்த ஒப்பந்தம் உள்ளூர் அரசியல் உள்நோக்கங்களால் உந்தப்பட்டது என்றும், மேலும் சீனா ஒருபோதும் துறைமுகத்தின் முறையான உரிமையைப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த கடனில் பெரும்பகுதி கடன் சீனாவிடமிருந்து பெறப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. எனவே, துறைமுகத்தில் இராணுவ ரீதியிலான அனுகூலத்தைப் பெற, சீனா தனக்கு சாதகமாக இருக்கும் சூழலைப் பயன்படுத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அது சுட்டிக் காட்டுகிறது.

**கடந்த தசாப்த காலத்தில் இலங்கையில் சீனாவின் பொருளாதார ரீதியிலான தலையீடுகள் அதிகரித்துள்ளதோ என சிறிய சந்தேகம் இருக்கிறது. மேலும் அது அப்பிராந்தியத்தில் தன் அரசியல் லட்சியங்களை முன்னேற்றப் பயன்படுத்தப்படலாம் என்கிற கவலைகள் தொடர்கின்றன.**

கடந்த தசாப்த காலத்தில் இலங்கையில் சீனாவின் பொருளாதார ரீதியிலான தலையீடுகள் அதிகரித்துள்ளதோ என சிறிய சந்தேகம் இருக்கிறது. மேலும் அது அப்பிராந்தியத்தில் தன் அரசியல் லட்சியங்களை முன்னேற்றப் பயன்படுத்தப்படலாம் என்கிற கவலைகள் தொடர்கின்றன.

உலகின் பிற பகுதிகளிலும் சீனா கடன் வழங்குவது சர்ச்சைக்குரிய ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளன. கடன் ஒப்பந்தங்களின் விதிமுறைகள் முக்கிய சொத்துக்களை சீனாவுக்கு அளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால் "எய்ட் டேட்டா" மற்றும் வேறு சில ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்த நூற்றுக்கணக்கான கடன் விவகாரங்களில், ஒன்றில் கூட, கடனை செலுத்தத் தவறினால், கடன் வழங்கியவர்கள், ஒரு பெரிய சொத்தை உண்மையில் கைப்பற்றிய நிகழ்வு எதுவும் இல்லை.

**சீனாவின் கடன் ஒப்பீடு**

சீனா தனது வெளிநாட்டுக் கடன் விவரங்களை வெளியிடுவதில்லை, மேலும் பெரும்பாலான சீன கடன் ஒப்பந்தங்களில், கடன் வாங்குபவர்கள், கடன் குறித்த விவரங்களை வெளியிடக் கூடாது என்கிற விதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடன் ஒப்பந்தங்களில் இத்தகைய இரகசியத்தன்மை பொதுவான நடைமுறை என்று அது வாதிடுகிறது.

"சர்வதேச வணிகக் கடன்களில் ரகசிய ஒப்பந்தங்கள் மிகவும் பொதுவானவை" என்கிறார் லண்டன் குயின் மேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லீ ஜோன்ஸ்.

"மேலும் சீனாவின் வளர்ச்சிக்கான நிதியுதவியானது அடிப்படையில் ஒரு வணிக நடவடிக்கையாகும்." என்கிறார் அவர்.

பெரும்பாலான தொழில்மயமான நாடுகள், பாரிஸ் கிளப் என்று அழைக்கப்படும் உறுப்பினர்களின் மூலம் தங்கள் கடன் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

சீனா இந்த குழுவில் சேர்வதில்லை என முடிவு செய்தது. ஆனால் கிடைக்கக்கூடிய உலக வங்கியின் தரவைப் பயன்படுத்தி, மற்ற நாடுகளின் கடன் விவரங்களோடு ஒப்பிடுகையில் சீனாவின் கடன்களின் விரைவான வளர்ச்சியை தெளிவாகக் காணலாம்.

**சீனா கடன்களை திருப்பி செலுத்துவது கடினமா?**

சீனா மேற்கத்திய அரசாங்கங்களை விட அதிக வட்டி விகிதத்தில் கடன் கொடுக்க முனைகிறது.

ஏறக்குறைய 4% வட்டிக்கு கடன் கொடுக்கிறது. இந்தக் கடன்கள் வணிகச் சந்தை விகிதங்கள் அளவுக்கு உள்ளன. உலக வங்கி அல்லது பிரான்ஸ் அல்லது ஜெர்மனி போன்ற தனிப்பட்ட நாடுகள் மற்றும் அமைப்புகள் வட்டி வசூலிப்பதை விட இது நான்கு மடங்கு அதிகம்.

சீனக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக் கெடு 10 ஆண்டுகளுக்கும் குறைவுதான். வளரும் நாடுகளுக்கு கிடைக்கும் சலுகை விலை கடன்களுக்கு 28 ஆண்டுகள் வரை கிடைக்கின்றன. சீன அரசுக்குச் சொந்தமான கடனளிப்பவர்கள், கடனளிக்கும் நிறுவனம் அணுகக்கூடிய ஒரு வெளிநாட்டுக் கணக்கில் குறைந்தபட்ச ரொக்க இருப்பை வைத்திருக்க வேண்டும் என்கிறது.

"ஒரு கடனாளி தனது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், நீதிமன்ற செயல்முறையின் மூலம் மோசமான கடனைச் வசூலிக்காமல், இந்த கணக்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம்." என்கிறார் எய்ட் டேட்டாவின் நிர்வாக இயக்குநர் பிராட் பார்க்ஸ்.

மேற்கத்திய நாடுகள் வழங்கும் கடன்களில் இந்த அணுகுமுறை அரிதாகவே காணப்படுகிறது.

மிகப்பெரிய மற்றும் வேகமாக வளரும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் - பெருந்தொற்றின் தாக்கத்தை சமாளிக்க ஏழை நாடுகளுக்கு கடன் நிவாரணம் வழங்கி உதவும் திட்டத்தை ஜி20 நாடுகள் முன்னெடுத்துள்ளன. சீனாவும் அதனுடன் இணைந்துள்ளது. மேலும் அத்திட்டத்தில் பங்கேற்ற எந்தவொரு நாட்டை விடவும், அதிக அளவில் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தான் பங்களித்துள்ளதாகக் கூறுகிறது சீனா.

மே 2020 முதல், இந்தத் திட்டத்தின் கீழ் ஜி20 நாடுகள் மொத்தம் 10.3 பில்லியன் டாலர் கடன் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளதாக உலக வங்கி கூறுகிறது. உலக வங்கியிடம் நாடு வாரியாக அவ்விவரத்தை கேட்ட போது, தகவல்களைப் பகிர முடியாது என்று கூறியது. -பி.பி.சி.

**கை வாங்**



ஈழநாடு



மருத்துவர் அப்துல்லா



# ‘ஒமைக்ரோன்’ ஆபத்தானதா? அதனை வெல்வது எவ்வாறு?

வைரஸ்களின் பரிணாம சுழற்சியில் அவற்றுள் பல்வேறு மரபணுக்கூறுகளில் மாற்றங்கள் ஏற்பட்டு, பல உருமாற்றங்களை அவை சந்திக்கின்றன. கொரோனா வைரஸும் அது தோன்றிய நாளிலிருந்து பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துவருகிறது. அல்பா, பீட்டா, டெல்டா என உருமாற்றங்கள் நடந்துவந்த சூழலில், தற்போது ஹஒமைக்ரோன்’ என்ற பெயருடன் உருமாற்றம் அடைந்துள்ளது கொரோனா வைரஸ்.

‘ஒமைக்ரோன்’ உருமாற்றம் விரைவில் தொற்றும் தன்மையுடன் இருப்பதால், வெகு விரைவாக அலையின் உச்சத்துக்குச் செல்லலாம் இதுவரை நேர்ந்த உருமாற்றங்களில் இந்த ‘ஒமைக்ரோன்’ மிகவும் வேகமாகத் தொற்றக்கூடியது என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இது நமக்கான எச்சரிக்கையே தவிர, பீதியடையத் தேவையில்லை.

‘ஒமைக்ரோன்’ உருமாற்றத்தில் வைரஸை மனிதனின் சுவாசப்பாதையில் ஒட்டச்செய்யும் ஸ்பைக் புரதத்தில் 30 இடங்களில் அங்கமாற்றம் நடைபெற்றுள்ளது. இதனால், ஏற்கெனவே தொற்று ஏற்பட்டவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படவும், தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு மறுதொற்று ஏற்படவும் வாய்ப்பு உள்ளது என்கின்றன ஆரம்பகட்ட ஆய்வு முடிவுகள்.

அதேசமயம், ‘ஒமைக்ரோன்’ அலை உருவானால், முதல் மற்றும் இரண்டாம் அலைகளில் தொற்று ஏற்பட்டு மீண்டவர்களுக்கும், இரண்டு டோஸ் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கும் தீவிர நோய் ஏற்படும் வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்படும் என்பது உறுதி. தற்போது ‘ஒமைக்ரோன்’ அலை வீசிவரும் தென் ஆப்பிரிக்காவிலும், பிரிட்டனிலும் இதே நம்பிக்கையூட்டும் செய்திகளைப் பார்க்க முடிகிறது.

ஏற்கெனவே தொற்றிலிருந்து மீண்டு, இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கும் ‘ஒமைக்ரோனுக்கு எதிராகக் கூட்டு எதிர்ப்பு சக்தி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது நிச்சயமாக மூன்றாம் அலையில் நம்மைக் காக்கும் கேடயமாக இருக்கும்.

தற்போதைய சூழலில் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி வழங்க அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இது கொரோனாவுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியை மேலும் அதிகரிக்கும். மூன்றாம் அலை ஏற்படும் சூழலில் எதிர்ப்பு சக்தி பெற்றவர்களுக்குத் தொற்று ஏற்பட்டாலும், தீவிரநிலையை அடைவதற்கான வாய்ப்பு வெகுவாக மட்டுப்படும். ஏற்கெனவே எதிர்ப்பு சக்தி பெற்ற பலருக்கும் சாதாரண தொற்றாகவே கடந்து செல்லும் வாய்ப்பு மிக அதிகம்.

இந்த உருமாற்றத்தை மரபணுப் பகுப்பாய்வுப் பரிசோதனையில் ‘எஸ்’ ஜீன் இல்லாமல் இருப்பதை வைத்து அடையாளம் (S gene dropout) காணலாம். “பொசிடிவ்” மாதிரிகளில் குறிப்பிட்ட மாதிரிகளை மரபணுப் பகுப்பாய்வு செய்து, இந்த உருமாற்றம் குறித்து ஆய்வு செய்ய முடியும்.

**ஒமைக்ரோனை எளிதாக வெல்லலாம்**

தென் ஆப்பிரிக்காவில் 2021 நவம்பர் இறுதியில் ஆரம்பித்த ‘ஒமைக்ரோன்’ தொற்று பன்மடங்கு கூடியிருக்கிறதுதான். ஆனாலும், அது பலருக்கும் சாதாரண காய்ச்சல், தொண்டை வலி, உடல்வலியுடன் சரியாகிவிடுகிறது. அங்கு ‘ஒமைக்ரோன்’அலை தொடங்கிய இந்த நான்கு வாரங்களின் முடிவில் தொற்றுக்குள்ளானோரில் 1.7 சதவிகிதத்தினர் மட்டுமே மருத்துவமனைகளில் அனுமதக்கப்படும் அளவு தீவிர நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர். இதுவே இதற்கு முன்பு அங்கு மூன்றாம் அலையைத் தோற்றுவித்த டெல்டா தொற்றின்போது 19 சதவிகிதமாக இருந்தது. அதாவது, டெல்டா தொற்றின்போது நூற்றில் 20 பேர் அனுமதிக்கப்பட்டனர் என்றால், ஒமைக்ரோன் தொற்றில் நூற்றில் இருவருக்கும் குறைவாகவே அனுமதிக்கப்படுகின்றனர். கிட்டத்தட்ட 10 மடங்கு தாக்கம் குறைவு.

முந்தைய அல்பா, பீட்டா, டெல்டா அலைகளைவிடவும் ஒமைக்ரோனின் பாதிப்பு குறைவாகவே இருப்பதைக் காண முடிகிறது. இதுவரை கொரோனா வைரஸுக்கு எதிராக அளித்துவரும் சிகிச்சைகளே ஒமைக்ரோன்னுக்கும் பொருந்தும். அறிகுறிகளற்ற மற்றும் சாதாரண அறிகுறிகளுடன் வெளிப்படும் கொரோனா நோய்க்கு எந்தச் சிகிச்சையும் இன்றி காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகளுக்கு மட்டும் சிகிச்சை அளித்தாலே போதும். மிதமான மற்றும் தீவிர நோய் நிலையில் இருப்பவர்களுக்கு ஒக்சிஜன்போன்ற மருந்துகளைக்கொண்டு சிகிச்சை அளிக்க முடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக முன்னெச்சரிக்கையுடன் இருந்தாலே ஒமைக்ரோன் நெருங்காமல் தற்காத்துக்கொள்ளலாம். முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், கைகளைச் சுத்தமாகப் பேணுதல், இரண்டு டோஸ் தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளுதல், முன்களப் பணியாளர்கள், முதியோர்கள், இணை நோய்கள் இருப்பவர்கள் மூன்றாம் டோஸ் பூஸ்டரை செலுத்திக்கொள்ளுதல்... இவையெல்லாம் மிகவும் அவசியம்.

தொற்றை உணர்ந்தால், உடனடியாகப் பரிசோதனை செய்துகொண்டு தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் பின்பற்றினால், வெகு நிச்சயமாக ஒமைக்ரோனை வெல்லலாம்!

**‘ஒமைக்ரோன்’ அலை உருவானால், முதல் மற்றும் இரண்டாம் அலைகளில் தொற்று ஏற்பட்டு மீண்டவர்களுக்கும், இரண்டு டோஸ் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கும் தீவிர நோய் ஏற்படும் வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்படும் என்பது உறுதி. தற்போது ‘ஒமைக்ரோன்’ அலை வீசிவரும் தென் ஆப்பிரிக்காவிலும், பிரிட்டனிலும் இதே நம்பிக்கையூட்டும் செய்திகளைப் பார்க்க முடிகிறது.**




# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

21. செவ்வக வடிவமான பலகைத் துண்டு ஒன்றின் உடைந்த பகுதி ஒன்று முதலில் தரப்பட்டுள்ளது. அதன் மறுபகுதியைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.





22. 30cm நீளமும் 20cm அகலமும் உடைய அட்டை ஒன்றின் ஒரு மூலையில் இருந்து உருவில் நிழற்றிக் காட்டியவாறு பக்கமொன்று 5cm அளவு கொண்ட சதுரத் துண்டு ஒன்று வெட்டி நீக்கப்பட்டது. இப்போது மீதியாக உள்ள பகுதியின் சுற்றளவு உள்ள நீளம் யாது?




(1) 90cm (2) 95cm (3) 100cm

- 23, 24 ஆகிய வினாக்களில், உருக்களில் எண்கள் எழுதப்பட்டுள்ள விதத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

23.




(1) 34
(2) 37
(3) 41

24.

| | | |
|---|---|---|
| 6 | 7 | 8 |
| 9 | 25 | ...... |
| 3 | 2 | 4 |

(1) 12
(2) 14
(3) 16

- 25, 26 ஆகிய வினாக்களில் உள்ள எண் தொடர்கள் ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு எண்கள் நீக்கப்பட்டால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் எண் கோலமாக அமையும். அவ்வாறு நீக்கப்பட வேண்டிய எண்களைத் தெரிவு செய்க.

25. 5, 7, 9, 10, 11, 13, 14
(1) 5, 9 (2) 10, 13 (3) 10, 14

26. 5, 8, 10, 15, 18, 20
(1) 5, 10 (2) 8, 18 (3) 15, 20

27. கண்காட்சி ஒன்றைப் பார்ப்பதற்காக நின்றவர்களின் வரிசையில் முரளிக்கு முன்னால் 12 பேரும் பின்னால் 8 பேரும் நின்றனர். வரிசையின் நடுவில் நிற்பவர் வரிசையின் எத்தனையாவது ஆளாவார்?
(1) 10 (2) 11 (3) 12

28. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாமா எங்கள் வீட்டுக்கு வருவார். ஜூன் மாதம் 26 ஆந் திகதி அவர் வீட்டுக்கு வந்திருந்தார் எனின், அடுத்து எப்போது அவர் வீட்டுக்கு வந்திருப்பார்?
(1) ஜுலை 2 (2) ஜுலை 3 (3) ஜுலை 4

29. பெறுமானம் கூடிச் செல்லும் வகையில் எண்களை ஒழுங்குபடுத்தினால் எழுத்துக்கள் அமையும் ஒழுங்கு எது?

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | 90909 | Q | 99009 | R | 90990 | S | 99900 | T | 90099 |

(1) TPRQS (2) TPSQR (3) TPQRS

30. 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களை எழுதும்போது '7' எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
(1) 11 (2) 19 (3) 20

31. மார்ச் மாதத்தின் இரண்டாம் நாள் வெள்ளிக் கிழமை ஆகும். அம்மாதத்தில் இரண்டாவதாக வரும் திங்கட்கிழமை மாதத்தின் எத்தனையாம் நாளாகும்?
(1) 11 (2) 12 (3) 14

32. ரமணி வேலைக்குச் செல்வது, வாரத்தின் திங்கள், புதன், சனி ஆகிய நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆகும்.
ராணி வேலைக்குச் செல்வது, வாரத்தின் செவ்வாய், வியாழன், சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் ஆகும்.
இருவரும் வேலைக்குச் செல்லும் நாட்கள் எவை?
(1) செவ்வாய், ஞாயிறு
(2) வியாழன், வெள்ளி
(3) வெள்ளி, ஞாயிறு

33. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். பின்வருவனவற்றில் எது பாடசாலையிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையாகும்?
(1) 273 (2) 292 (3) 346

## விடைகள்

21) 3 22) 3 23) 2 24) 3 25) 3 26) 2 27) 2

28) 2 29) 1 30) 3 31)2 32) 3 33) 2

---

கல்வி tv CHANNEL-1

**11.01.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

**11.01.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# எரிபொருள் இறக்குமதிக்கு நாட்டில் நிதி பற்றாக்குறை

## திலும் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு, ஜன. 11

**நாட்டுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு நிதி பற்றாக்குறை காணப்படுவதாகவும் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**



நிலவும் மின்சார நெருக்கடி தொடர்பாக நேற்று திங்கட்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணும் வகையில் மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் கலந்துரையாடுவர்.

எண்ணெய் இறக்குமதிக்கான நிதிப் பற்றாக்குறையே பிரதான பிரச்னை. இதனை மக்களிடம் மறைக்க வேண்டிய அவசிய மில்லை.

இருப்பினும், நிலைமையை சமாளிப்பதாகவும் ஏப்ரல் மாதத்துக்குள் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வேலைத்திட்டத்தை நிதியமைச்சு வகுத்துள்ளது-என்றார். (அ)

# வன்னி பள்ளிவாசல்களுக்கு சஜித் பிரேமதாஸ விஜயம்



மன்னார், ஜன. 11

கடந்த 7, 8ஆம் திகதிகளில் வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, வவுனியா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் மன்னார், தாராபுரம் ஹுஸைனியா ஜும்ஆ பள்ளிவாசல் ஆகியவற்றுக்கு சென்று, அங்கு நடைபெற்ற விஷேட துஆ பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வுகளில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் மற்றும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பொது மக்களும் பங்கேற்றிருந்தனர்.(அ)

# வவுனியா வைத்தியசாலை ஊடாக வீட்டுமட்ட நோயாளர்கள் சேவை

வவுனியா, ஜன. 11

வவுனியா வைத்தியசாலையினூடாக வீட்டுமட்ட நோயாளர் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் க. ராகுலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாண ஆளுநரின் சிந்தனைக்கு அமைய மாகாண சுகாதார அமைச்சின் செயல் திட்டத்தின் ஊடாக வீட்டு மட்டத்திலான நோயாளர் சேவை வவு னியா வைத்தியசாலையிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் தைப்பொங்கலில் இருந்து இந்த செயல்திட்டத்தை வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பிக்க வைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இந்த வீட்டு மட்டத்திலான நோயாளர் சேவையினூடாக நீண்டகால நோய் தொற்றுக்குள்ளானவர்கள், நோய்த்தாக்கத்தினால் படுக்கையில் உள்ளவர்கள், விசேட தேவைக்குரியவர்கள், வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறுவதில் கடும் சிரமத்தை எதிர்கொள்பவர்கள் பயனை பெற முடியும்.

மேற்குறித்த நோயாளர்களுக்கு வீடுகளுக்கு வந்து வவுனியா வைத்தியசாலை மருத்துவக் குழுவால் சிகிச்சை வழங்கப்படவுள்ளது. இந்த திட்டத்தினூடாக அவசர நோயாளர்களுக்கான சிகிச்சை வழங்கப்படாது என்பதனை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் வவுனியா வைத்தியசாலையையே நாடவேண்டும்.

இதேவேளை, இந்த திட்டத்துக்காக விசேட தொலைபேசி இலக்கம் விரைவில் ஊடகங்களூடாக வழங்கப்படவுள்ளதுடன் தொலைபேசிக்கு வரும் அழைப்புகளின் ஒழுங்கிலேயே நோயாளர்களுக்கான சேவையும் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

# விபத்துக்களில் இருவர் மரணம்!

கொழும்பு, ஜன. 11

சிலாபம் - பங்கதெனிய - ஆனமடுவை வீதியில் பயணித்த பாரவூர்தியொன்று எதிர்திசையில் வந்த சைக்கிளுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பங்கதெனிய பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பரவகும்புக நோக்கி பயணித்த டிப்பர் ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி உயிரிழந்தார்.

சாரதியால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் பாதுகாப்பு வேலியில் மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அம்பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார். (அ)

# வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி கடற்கரைகளில் 2 சடலங்கள்

கொழும்பு, ஜன. 11

வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி கடற்கரைகளில் அடையாளம் தெரியாத இரு சடலங்கள் நேற்று திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில் நிர்வாணத்துடன் ஆணின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றைய சடலம் பம்பலப்பிட்டி மெரைன் டிரைவ் கடற்கரையில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இரு சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மின்சாரசபைக்கு நான் நிதியை தேட முடியாது!

## அமைச்சர் உதய கம்மன்பில

கொழும்பு, ஜன. 11

மசகு எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவதற்காக மாத்திரமே தன்னால் டொலர் தேட முடியும் என்றும், மின்சார சபைக்காக டொலர் தேட தன்னால் முடியாது எனவும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான உடன்படிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வழக்கில் ஆஜராக வந்திருந்தபோது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# மக்கள் பிரச்னையை பேசமுடியாவிடின் பதவியைத் தூக்கியெறிவதற்கு தயார்

## கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா

கொழும்பு, ஜன. 11

மக்களின் பிரச்னைகளை கேட்கவேண்டும். அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லவும் வேண்டும். மக்களின் பிரச்னைகளைப் பேசமுடியாவிடின், இராஜாங்க அமைச்சர் பதவியை தூக்கியெறிய தான் தயாரென இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

மக்களை வரிசைகளில் நிற்க வைத்து அலையவிட தேவையில்லை எனத் தெரிவித்துள்ள அவர், அதனை கண்டும் காணாதது போல இருக்கமுடியாது என்றும் கூறினார்.



அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் வார்த்தைகளில், மக்களின் குரலே ஒலிக்கின்றது.

ஆகையால், விமர்சனங்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடு, பொருளாதார சிக்கலுக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கின்றது. அதிலிருந்து மீண்டெழுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்றும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்றால், எதிர்காலத்தில் தானும் வீதிக்கு இறங்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் கூறினார். (அ)




# உலக ஹிந்தி தினமான நேற்று யாழ்ப்பாணத்திலும் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜன. 11

உலக ஹிந்தி தினமான நேற்று திங்கட்கிழமை (ஜனவரி 10) யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், இந்தியா கோர்ணரில் ஹிந்தி மொழி கற்கும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன், அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்திய துணைத்தூதரக பதில் துணைத்தூதர் ராம் மகேஸ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)




# நிலவில் தண்ணீர் ஆதாரம்!

## சீன விண்கலத்தின் புதிய கண்டுபிடிப்பு

பீஜிங், ஜன. 11

நிலவின் தரைப்பரப்பில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை சீனா விண்கலம் கண்டறிந்துள்ளது.

நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக சாங்கே-5 என்ற விண்கலத்தை கடந்த 2020ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் சீனா அனுப்பி வைத்திருந்தது.

நிலவின் மத்திய உயர் அட்சரேகை பகுதியில் தரையிறங்கிய அந்த விண்கலத்தின் லாண்டரில் உள்ள ஒரு கருவி, தரைப்பரப்பில் உள்ள பாறையின் நிறமாலை பிரதிபலிப்பை அந்த இடத்திலேயே அளந்தது. பின்னர், ஆயிரத்து 731 கிராம் எடையிலான பாறை மாதிரியுடன் விண்கலம் பூமிக்குத் திரும்பியது.

அந்தப் பாறை மாதிரியை சீன அறிவியல் அக்கடமியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அதன் முடிவுகள் 'சயின்ஸ் அட்வான்சஸ்' இதழில் வெளியாகியுள்ளது.

அதன்படி, நிலவின் தரைப்பரப்பில் உள்ள பாறைப் படிவங்களில் ஒரு தொன்னுக்கு 120 கிராம் தண்ணீர் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. சந்திரனின் நிலப்பரப்பில் அதிக ஈரப்பதத்துக்கு காரணம் சூரிய காற்று ஆகும். அதுதான் தண்ணீரை உருவாக்கும் நைதரசனை கொண்டு வந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# டெல்டாக்ரோன் புதிய உருத்திரிபு சைப்பிரஸ் நாட்டில் கண்டுபிடிப்பு



நிக்கோசியா, ஜன. 11

சைப்பிரஸ் நாட்டில் டெல்டா-ஒமைக்ரோன் கலவையான டெல்டாக்ரோன் புதிய உருத்திரிபு கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

புதிய வகை கொரோனாவுக்கு இதுவரை அறிவியல் பெயர் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இந்த வைரஸ் டெல்டா வகையின் மரபணு பின்னணியை ஒத்துள்ளதுடன், ஒமைக்ரோனின் சில திரிபுகளையும் கொண்டுள்ளதால் அதற்கு டெல்டாக்ரோன் என சைப்பிரஸ் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பேராசிரியரான லியோண்டியோஸ் கோஸ்ட்ரிகிஸ் பெயரிட்டுள்ளார்.

கொரோனா வைரஸின் டெல்டா, டெல்டா பிளஸ், பீட்டா உள்ளிட்ட திரிபுகளைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்காவில் ஒமைக்ரோன் திரிவு கண்டறியப்பட்டு அது உலகெங்கும் வேகமாகப் பரவி வருகிறது.

இவ்வாறான நிலையிலேயே தற்போது டெல்டா மற்றும் ஒமைக்ரோன் திரிபுகளின் கலவையான டெல்டாக்ரோன் சைப்ரஸில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் டெல்டா வகையின் மரபணு பின்னணியை ஒத்துள்ளதுடன், ஒமைக்ரோனின் சில திரிபுகளையும் கொண்டுள்ளது. இந்த வகை புதிய திரிபு தொற்றுக்குள்ளாகி இதுவரை 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளது.

புதிய டெல்டாக்ரோன் திரிபின் தன்மை என்ன? எதிர்காலத்தில் அது ஆதிக்கம் செலுத்தும் திரிபாக மாறுமா? என்பது குறித்து மேலும் ஆராயப்பட வேண்டும் என சைப்ரஸ் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான பேராசிரியரான லியோண்டியோஸ் கோஸ்ட்ரிகிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய திரிபு மேலதிக ஆய்வுக்காக வைரஸ்களைக் கண்காணிக்கும் சர்வதேச தரவுத்தளத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# நியூயோர்க் அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து!

## 9 சிறுவர்கள் உட்பட 19 பேர் பலி!!







நியூயோர்க், ஜன. 11

நியூயோர்க் நகரத்தின் தி பிராங்க்ஸ் பரோவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 09 சிறுவர்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். அத்துடன் டசின் கணக்கானவர்கள் காயமடைந்தனர் என நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவித்தார்.

கட்டடத்தில் இருந்த ஹீற்றர் ஒன்றில் இருந்து தீ பரவி இருக்கலாம் எனக் கூறிய அவர், இது அளவிட முடியாத சோகம் எனக் குறிப்பிட்டார்.

கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் இருந்து தீ பரவத் தொடங்கி கட்டடம் முழுவதும் பரவியது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலர் தீயில் கருகி உயிரிழந்ததுடன், மேலும் சிலர் புகை காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்ததாக நகரின் தீயணைப்புத் துறை ஆணையர் டேனியல் நிக்ரோ செய்தியாளர்களிடம் கூறினார்.

கட்டத்தில் உள்ள வீடொன்றின் படுக்கை அறையில் உள்ள ஒரு சிறிய மின்சார ஹீட்டரில் இருந்து தீ பரவி இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நகரப் பகுதி அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பாதுகாப்புத் தரங்கள் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை பிலடெல்பியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடத்தில் தீ பரவியதில் 08 சிறுவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்த நிலையில் இந்த வாரம் அமெரிக்காவில் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் ஏற்பட்ட இரண்டாவது பெரிய தீ விபத்தாக நேற்றைய சம்பவம் பதிவாகியுள்ளது. (அ)

# பங்களாதேஷில் ரோஹிங்கியா அகதிமுகாமில் பெரும் தீ விபத்து

## 1,200 குடியிருப்புக்கள் அழிந்தன!

டாக்கா, ஜன. 11

பங்களாதேஷில் ரோஹிங்கியா அகதிகள் முகாமின் ஒரு பகுதியில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில், சுமார் 1,200 குடிசைகள் எரிந்தழிந்துள்ளன. ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகள் குடியிருப்பை இழந்தனர்.

காக்ஸ் பஜாரின் உக்கியாவில் உள்ள அகதிகள் முகாமிலேயே தீ விபத்து ஏற்பட்டது.

மூங்கில், தார் பூசிய கித்தான் துணி போன்றவற்றால் அமைக்கப்பட்ட முகாமின் பகுதிகளில் தீ மிக விரைவில் பரவியது.

இருப்பினும் சுமார் 2 மணி நேரத்துக்குள் முகாமில் பரவிய தீ கட்டுப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிவாயு சிலிண்டர் வெடித்ததை தொடர்ந்து இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. வீடுகள், பாடசாலைகள், மருத்துவ மையங்கள் அழிந்துள்ளன.

மியன்மாரிலிருந்து தப்பி வந்த ரோஹிங்கியா இனத்தவர்கள், 2017ஆம் ஆண்டு முதல் காக்ஸ் பஜாரில் உள்ள அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இங்கு சுமார் 850,000 ரோஹிங்கியாக்கள் தங்கியிருக்கின்றனர்.

பங்களாதேஷிலுள்ள வசதியற்ற ரோஹிங்கியா அகதி முகாம்களில் அடிக்கடி தீவிபத்து நிகழ்வது குறிப்பிடத்தக்கது. (அ)





# தடுப்பூசிக்கு எதிராக பிரசாரம் செய்த பிரான்ஸ் எம்.பி தொற்றால் உயிரிழப்பு

பரிஸ், ஜன. 11

பிரான்ஸில் கொரோனா தடுப்பூசிக்கு எதிராக பிரசாரம் செய்த பாராளுமன்ற எம்.பி. ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்தார்.

பிரான்ஸில், கொரோனாவுக்கு எதிராகத் தடுப்பூசி செயல்படுவது சந்தேகத்துக்குரியது என்று தடுப்பூசிக்கு எதிராகத் தொடர் பிரசாரங்களில் ஈடுபட்ட பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸ் எவ்ரார்ட் (வலசாரி கட்சியைச் சேர்ந்தவர்) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அவருக்கு வயது 76.

மறைந்த ஜோஸ் எவ்ரார்ட் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவரது மறைவுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஜோஸ் எவ்ரார்ட் மறைவு, தடுப்பூசிக்கு எதிராக பிரான்ஸில் பிரசாரம் செய்தவர்களுக்கு பதிலாக அமைந்துள்ளதாக சமூக வலைதளங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர். உலக அளவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. உலக சுகாதார அமைப்பு 2021 டிசெம்பர் 27ஆம் திகதி முதல் 2022 ஜனவரி 2ஆம் திகதி வரையிலான உலக அளவிலான கொரோனா தொற்று குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கடந்த வாரத்தில் உலக அளவில் கொரோனா பரவல் திடீரென 71 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே சமயம், உயிரிழப்பு 10 சதவீதம் குறைந்துள்ளது.



# இலங்கையை வந்தடைந்தது சிம்பாப்வே கிரிக்கெட் அணி!

கொழும்பு, ஜன. 11

இலங்கை அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் மோதுவதற்காக சிம்பாப்வே அணி நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தது.

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 16 ஆம் திகதி கண்டி, பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாவது மற்றும் மூன்றாவது போட்டிகள் வரும் 18, 21ஆம் திகதிகளில் அதே மைதானத்தில் நடைபெறும்.

கோவிட்-19க்கு எதிரான சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க பார்வையாளர்கள் யாரும் இல்லாமல் பகல் - இரவு போட்டிகளாக இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ)

# ட்ரெண்ட் போல்ட் புதிய மைல்கல்!

கிறிஸ்சூரிச், ஜன. 11

பங்களாதேஷுக்கு எதிராக 5 விக்கெட்களை கைப்பற்றிய டிரெண்ட் போல்ட், டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்களைக் கடந்தார்.

நியூசிலாந்தில் பங்களாதேஷ் அணி தற்போது இரணடாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது.

இதில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான ட்ரெண்ட் போல்ட் 5 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார்.

அவர், மெஹிடி ஹசனின் விக்கெட்டைக் கைப்பற்றியபோதே 300 டெஸ்ட் விக்கெட் என்ற மைல்கல்லை தொடர்.

இவர் இந்த இலக்கை எட்டிய நான்காவது நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளராவார். இதற்கு முன்பு ஹேட்லி, விற்றோரி, சௌதி ஆகியோர் 300 டெஸ்ட் விக்கெட்களை கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# லதாம் இரட்டை சதம் நியூசிலாந்து எழுச்சி!

## 126 ஓட்டங்களுக்கு சுருண்டது வங்கம்!



கிறிஸ்டசூரிச், ஜன. 11

நியூசிலாந்து அணியின் தலைவரும் தொடக்க வீரருமான ரொம் லதாம் இரட்டைச் சதமும், மற்றொரு வீரரான கொன்வே சதம் அடித்து அசத்த முதல் இனிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 521 ஓட்டங்களை குவித்துள்ளது நியூசிலாந்து அணி.

இதேநேரம் நேற்று தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ் அணி 126 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது நியூசிலாந்தின் கிறிஸ்சூரிச்சில் நடக்கிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 349 ஓட்டங்களை குவித்து ஒரு விக்கெட்டை மட்டும் இழந்திருந்தது.

ரொம் லதாம் 186 ஓட்டங்களுடனும், கொன்வே 99 ஓட்டங்களுடனும் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார் கொன்வே. 109 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ரெய்லர் நிதானம் காட்டவே லதாம் 200 ஓட்டங்களை எட்டினார்.

ரெய்லர் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து நிக்கோல்ஸ் 0, டரில் மிற்செல் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் வந்த ரொம் புளூண்டெல் நிதானம் காட்டினார்.

இதனிடையே 373 பந்துகளில் 252 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அவர் 34 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களையும் விளாசியிருந்தார்.

புளூண்டலும் அரைச்சதம் அடிக்கவே,128.5 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்த நியூசிலாந்து அணி 521 ஓட்டங்களை குவித்திருந்தது.

சொரிபுல் இஸ்லாம், ஹுசைன் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு நியூசிலாந்து அணியின் ட்ரெண்ட் போல்ட் சிம்மசொப்பனமானார்.

நியூசிலாந்தின் வேகங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் 41.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 126 ஓட்டங்களையே பெற்றது பங்களாதேஷ் அணி.

அந்த அணியின் ஆரம்பவரிசை இரு வரிசை இலக்க ஓட்டங்களை தொடமுடியாமல் ஆட்டமிழக்கவே. 7ஆவது விக்கெட்டுக்காக இணைந்த யசீர் அலி, நுருல் ஹசன் ஆகியோர் மட்டுமே பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். யசீர் அலி 55, ஹசன் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் ஏனைய விக்கெட்களும் வேகமாக வீழ்த்தப்பட்டன.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ட்ரெண்ட் போல்ட் 5, ரிம் சௌதி 3, ஜமைசன் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.395 ஓட்டங்களால் முன்னிலை யில் உள்ள நியூசிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப் பெடுத்தாடுமா அல்லது பங்களா தேஷ் அணியையே தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறு பணிக்குமா என்பது இன்று தெரியும். இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமாகும்.

# ஜொகோவிச்மீதான தடையை நீக்கியது ஆஸி. நீதிமன்றம்!



சிட்னி, ஜன. 11

அவுதிரேலியாவில் இருந்து தான் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் நோவக் ஜொகோவிச் வெற்றி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய பெடரல் நீதிபதி அந்தோனி கெல்லி திங்களன்று அவசர மெய்நிகர் நீதிமன்ற விசாரணையின் போதே குறித்த மேல் முறையீட்டு மனு மீதான தீர்ப்பை வாசித்தார்.

இதன்படி, ஜொகோவிச் வீசா இரத்து தொடர்பான அவுஸ்திரேலிய அதிகாரிகளின் முடிவை நிராகரித்தார். உலகின் முதல்நிலை ரென்னிஸ் நட்சத்திரமான ஜொகோவிச் நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முன்னர் அவுஸ்திரேலிய குடிவரவு தடுப்பு விடுதியில் நான்கு இரவுகளைக் கழித்தார்.

உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீரராக திகழ்பவர் சேர்பியாவைச் சேர்ந்த 34 வயதாகும் நோவக் ஜொகோவிச். கிராண்ட் ஸ்லாம் போட்டித்தொடர்களுள் ஒன்றான 'அவுஸ்திரேலிய ஓப்பன்' வரும் ஜனவரி 17ஆம் திகதி தொடங்க இருக்கிறது. நடப்பு சம்பியனான ஜொகோவிச், அவுஸ்திரேலிய ஓப்பனில் கலந்து கொள்வதற்காக டுபாய் வழியாக மெல்பர்ன் விமான நிலையத்தை வியாழன் அன்று சென்றடைந்தார்.

அவுஸ்திரேலிய ஓப்பனில் கலந்துகொள்ளும் வீரர்கள் அனைவரும் இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டிருக்க வேண்டும் என போட்டி அமைப்பும், அவுஸ்திரேலிய அரசும் உத்தரவிட்டுள்ளது.

இதே நேரத்தில் நோவக் ஜொகோவிச் மெல்போர்ன் வந்த பின்னர் அவரின் வீசாவை அவுஸ்திரேலிய அரசு அதிரடியாக இரத்து செய்தது. அவர் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு, மெல்பர்ன் விமான நிலையம் அருகே உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டார்.

கொரோனா தடுப்பூசிக்கு எதிரான ஜொகோவிச் இதுவரை தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என கூறப்படுகிறது. அதே நேரத்தில், இதற்காக ஆஸி. ஓப்பன் போட்டி அமைப்பிடம் இருந்து சிறப்பு விலக்கு பெற்றுள்ளாரென ஜொகோவிச் தரப்பில் கூறப்படுகிறது. ஆனால், என்ன மருத்துவ காரணத்திற்காக அவர் விலக்கு பெற்றிருக்கிறார் என்ற தகவலை அவர் வெளியிடவில்லை.

இதனிடையே அமெரிக்க எல்லை பாதுகாப்பு படை சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜொகோவிச் அவுஸ்திரேலியாவில் நுழைவதற்கான தகுந்த ஆதாரங்களை வழங்க தவறிவிட்டார். எனவே அவரின் வீசா இரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பூசகர் குடும்பத்தினரை கடத்திய நால்வர் கைது

கொழும்பு, ஜன. 11
பூசகர் உட்பட குடும்பத்தினரை கடத்தி 75 இலட்சம் ரூபாயை கொள்ளையடித்த 4 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

வெள்ளவாய-குடா ஓயா பிரதேசத்தில் உள்ள ஆலய மொன்றை உடைத்து அதன் பூசகர், அவரது மனைவி மற் றும் பிள்ளைகளை கடத்திச் சென்று 7.5 மில்லியன் ரூபாவை கொள்ளையடித்த நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

கடத்தலுக்கு பயன்படுத் தப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு வாகனங்களுடன் சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் மொனராகலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

வீரவில பிரதேசத்தைச் சேர்ந்த 30 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள் ளனர் என பொலிஸார் தெரி வித்தனர். (அ)





உலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட 11 பேரின் 48ஆவது ஆண்டு நினைவேந்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோர் ஆதரவாளர்களுடன் அஞ்சலி செலுத்திய வேளை…!

# மின்சாரத்தை துண்டிக்காது தொடர்ச்சியாக வழங்குங்கள்!

## அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜன. 11

**மின்சாரத்தை துண்டிக்காது வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மின்சக்தி அமைச்சருக்கு உத்தரவு வழங்கியுள்ளார்.**

மின்வெட்டு தொடர்பான இறுதி தீர்மானத்தை மேற் கொள்வதற்கான விசேட கலந் துரையாடல் நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற போதே ஜனாதிபதி இந்த உத்த ரவை பிறப்பித்தார் என்று விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மின்சாரத்தை துண்டிக்காது, தொடர்ந்து விநியோகத்தை மேற் கொள்வதற்கே எதிர் பார்க்கப் படுகின்றது. முடியு மான அளவு மின்சாரத்தை விநியோகிக்குமாறு ஜனாதிப தியும் அறிவுறுத்தியுள் ளார். எவ்வாறு தடையின்றி மின்சார விநியோகத்தை மேற் கொள்வது என்பது தொடர்பில் மின்சார சபை மற்றும் கனியவள கூட் டுத்தாபனத்தின் பங்குபற் றுதலுடன் ஆராயப்பட்டது.

தடையின்றி தேவையான எண்ணெயை வழங்குவதற்கு கனியவள கூட்டுத்தாபனம் நட வடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கறுப்பு பட்டியலிலிருந்து நீக்குங்கள் சீனாவை கோரியது மக்கள் வங்கி!

கொழும்பு, ஜன. 11
சீனாவின் கறுப்புப் பட்டிய லில் இருந்து தம்மை நீக்குமாறு இலங்கை மக்கள் வங்கி கோரிக்கை முன் வைத்துள்ளது.

கடன் கடிதத்திற்கு அமைய சீன உர நிறுவனத்திற்கு 69 இலட்சம் டொலர் செலுத்தப் பட்டுள்ளதாக சீன தூதரகத் துக்கு அறிவித்தே மக்கள் வங்கி தன்னை கறுப்புப் பட்டியலில் இருந்து விடுவித்துக்கொள்வ தற்கான கோரிக்கையை முன் வைத்துள்ளது.

முன்னதாக ஒப்பந்தத்தை மீறி கடன் சான்று பத்திரத்திற் கான கொடுப்பனவை செலுத் தாமையால் மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இணைப் பதாக இலங்கைக்கான சீனத் தூ தரகம் கடந்த 2021 ஒக்ரோபர் 29 ஆம் திகதி அறிவித்திருந்தது.

சீன தூதரகத்தின் பொருளா தார மற்றும் வர்த்தக செயலகத் தினால் கறுப்புப் பட்டியல் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சீனத் தூதரகம் அப்போது தெரிவித்திருந்தது.

அதன்படி, இலங்கையுட னான சர்வதேச கொடுக்கல் வாங்கலின் போது மக்கள் வங் கியினால் வெளியிடப்படும் கடன் சான்று பத்திரத்தை ஏற் றுக்கொள்வதைத் தவிர்க்கு மாறு சீன முதலீட்டாளர்க ளுக்கு அறிவிப்பதாகவும் சீன தூதரகம் தெரிவித்திருந்தது.

இதனைவிட மக்கள் வங்கி யுடன் கொடுக்கல் வாங்கல் களை முன்னெடுக்கும் முதலீட் டாளர்கள் எச்சரிக்கையுடனான நிர்வாகத்தை முன்னெடுக்கு மாறு அறிவிப்பதாகவும் சீனத் தூதரகம் அறிவித்திருந்தது.

வர்த்தக சட்ட திட்டங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக கொள்கைக்கு அமைய மக்கள் வங்கி செயல்படாது, சேதனப் பசளை இறக்குமதி விடயத்தில் கடன் சான்று பத்திரத்திற்கான கொடுப்பனவை செலுத்தாமை யால் சீன நிறுவனத்திற்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி யுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் குறிப்பிட்டி ருந்தது.

உரக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இரு தரப்பினரி டையே ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கு அமைய வெளியிடப்பட்ட கடன் சான்று பத்திரத்திற்கான கொடுப்பனவை செலுத்துமாறு சீனாவின் சிந்தாவோ சீவிங் பயோடெக் நிறுவனம் மக்கள் வங்கியிடம் கோரிக்கை விடுத் துள்ள போதும் இதுவரை அது செலுத்தப்படவில்லை எனவும் சீன தூதரகம் குறிப்பிட்டே கறுப்புப் பட்டியலில் மக்கள் வங்கியை சேர்ப்பதாக அறிவித் திருந்தது.

இரு வர்த்தக மேல் நீதிமன் றங்களின் உத்தரவுகளுக்கு அமையவே, வர்த்தக நடவடிக் கைகளுடன் தொடர்புபட்ட தரப்புக்கு வழங்கப்பட்ட கடன் சான்று பத்திரத்திற்கான கொடுப்பனவு செலுத்தப்பட வில்லை எனவும், நாட்டின் சட்டத்துக்கு அமையவே வங்கி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் வங்கி கறுப்புப் பட்டியல் அறிவித் தலை அடுத்து விளக்கமளித் திருந்தது.

இந் நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் பற்றீரியா அடங் கிய சேதன பசளையை நாட் டிற்கு அனுப்பியதாக கூறப் பட்ட சீன நிறுவனமான குவிங்டாவோ சீவிங் பயோ டெக் குறூப் லிமிடட், அதன் இலங்கை பிரதிநிதிக்கு பணம் செலுத்துவதை தடுத்து மக்கள் வங்கிக்கு விதிக்கப்பட்ட இடைக் கால தடை உத்தரவுகள் கடந்த 3 ஆம் திகதி நீக்கப்பட்டன.

சேதனப் பசளை விவகா ரத்தில், கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குக ளிலும், முறைப்பாட்டாளர் தரப்புக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே சமரச நிலை எட்டப் பட்டதால் இவ்வாறு இடைக் கால தடை உத்தரவுகள் நீக்கப் பட்டன.

இதற்கான உத்தரவுகளை கொழும்பு வணிக மேல் நீதி மன்றின் 2 ஆம் இலக்க நீதி மன்ற அறையின் நீதிபதி பிரதீப் ஹெட்டி ஆரச்சி, வணிக மேல் நீதிமன்றின் 3 ஆம் இலக்க நீதி மன்ற அறையின் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரால் பிறப்பிக்கப்பட்டன.

இந்நிலையில் வழக்கு சம ரசத்தின் போது இணங்கப் பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, கடன் கடிதத்திற்கு அமைய சீன உர நிறுவனத்திற்கு 69 இலட்சம் டொலர் கடந்த 7 ஆம் திகதி செலுத்தப்பட்டது. இதனையடுத்தே மக்கள் வங்கி தற்போது, கறுப்புப் பட்டி யலிலிருந்து தம்மை விடுவிக் குமாறு கோரியுள்ளது. (ஐ)

# மனைவியை கிணற்றில் தள்ளி கொன்ற கணவன்!

## முள்ளியவளையில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 11
முள்ளியவளையில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண்ணை தாக்கி கிணற்றில் தள்ளி தானே கொன்றார் என்று அவரின் கணவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

முல்லைத்தீவு - முள்ளியவளை பூதன்வயல் பகுதியில் நேற்று முன்தினம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். அதே இடத் தைச் சேர்ந்த யோகராசா ராஜினி (வயது - 39) இரண்டு பிள்ளை களின் தாயாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். அவரின் உடலம் நேற்று உடற்கூற்றுப் பகுப்பாய்வு செய்யப் பட்டது.

குறித்த பெண்ணின் தலையில் காயம் காணப்பட்டதாகவும் அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தாரெனவும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசு தேவா அறிக்கையிட்டார்.

இந்த நிலையில் பொலிஸார் நடத்திய விசாரணையில் பெண் ணின் கணவர் தானே கொலை செய்தார் எனக் கூறி குற்றத்தை ஒப்புக் கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூதன்வயல் கிராமத்திலுள்ள தென்னங்காணியில் உள்ள கிணற்றி லிருந்து கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை குடும்பப்பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. கடந்த 4ஆம் திகதியில் இருந்து குறித்த பெண்ணை காணவில்லை என்று உறவினர்கள் தெரிவித்த நிலை யிலேயே கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த பெண் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்துள்ளார். சம்பவத்தையடுத்து கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தானே அவரை தாக்கிக் கிணற்றில் தள்ளி விட்டார் என்று கணவர் பொலிஸில் வாக்குமூலம் அளித்துள்ளார். (ஐ)

# ஐஸ்கிறீம், தயிர் உற்பத்தியை குறைப்பதற்கு அரசு தீர்மானம்!

கொழும்பு, ஜன. 11
ஐஸ்கிறீம் மற்றும் தயிர் உற் பத்தி விகிதத்தை குறைத்து பால் மற்றும் பால் மாவின் உற்பத்தி விகிதத்திற்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சந்தையில் பால் மாவுக்கான தட்டுப்பாட்டைக் குறைக்கும் நோக் கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடமாடும் சேவையின் ஊடாக பால் விநியோகிக்கும் முயற்சி உட்பட நாளாந்த பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக கால்நடை இரா ஜாங்க அமைச்சர் டி. பி. ஹேரத் தெரிவித்துள்ளார். (ஐ)

## வெளிநாட்டு...

நடவடிக்கையை அடுத்து நேற்றுக் காலை குறித்த வெளி நாட்டவர் கைது செய்யப்பட்டார்.

அபுதாபி ஊடாக பிரான்ஸின் பரிஸ் நகருக்குச் செல்லும் EY-265 vd;w Etihad Airways விமானத்தில் செல்வதற்காக குறித்த வெளிநாட்டவர் நேற்று அதிகாலை 02.45 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்துக்குள் பிரவேசித்த வெளிநாட்டவர், விமானப் பயணச்சீட்டைப் பெற்றுக் கொண்டு, தனது ஆவணங்களை சரிசெய்வதற்காக குடிய கல்வு நிலையத்துக்கு வந்துள்ளார்.

அங்கு அவர் வழங்கிய சீசெல்ஸ் தேசிய கடவுச்சீட்டில் சந்தேகம் கொண்ட குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தொழில்நுட்ப விசாரணைகளுக்காக அதிகாரிகளை எல்லை கண்காணிப்புப் பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கிடையில், குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் வெளிநாட்டவரை விசாரித்துக்கொண்டிருந்தபோது, அவர் திடீரென தான் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்து புறப்பட்டு முனையம் வழியாக ஓடினார்.

சந்தேக நபர் உடனடியாக அருகில் இருந்த சுவரில் ஏறி, விமான நிலையப் புறப்பாடு முனையத்தின் மேற்கூரையில் ஏறி அதில் ஒளிந்துகொண்டார்.

அப்போது விமான நிலையப் பாதுகாப்பு கமராக்களை கண்காணித்து வந்த விமானப்படை கொமாண்டோக்கள் உடனடியாகக் குழுவொன்றை , தப்பி ஓடிய வெளிநாட்டவர் பதுங்கியிருந்த இடத்துக்கு அனுப்பி வைத்தனர்.

வெளிநாட்டவரின் கழுத்து பகுதியில் 4693 என்ற எண் தெளிவாக பச்சை குத்தப்பட்டிருந்தது.

அவர் வெளிநாட்டுச் சிறையிலிருந்து தப்பியோடியவராகவோ அல்லது வெளிநாட்டில் அத்தியாவசியப் பிரமுகராகவோ அல்லது சில சர்வதேச பயங்கரவாதக் குழுவின் உறுப்பினராகவோ இருக்கலாம் என விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகம் கொண்டனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தால் விமான நிலையப் பகுதி சிறிது நேரம் போர்க்களமாக காட்சியளித்தது. (அ)

## இலங்கை...

இலங்கை - சீனா இடையிலான இருதரப்பு உறவுகளை ஒரு புதிய நிலைக்கு கொண்டு செல் வதற்கு இலங்கையுடன் கைகோர்க்க சீனா தயாராக உள்ளது என்று பீஜிங்கில் வெளியிட்ட அறிக்கையில் வாங் யி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தெற்காசியாவில் சீனாவின் பெல்ட் மற்றும் ரோட் (Belt and Road)ஒத்துழைப்பில் இலங்கை ஒரு முக்கிய அங்கமாக உள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தின் முதற்கட்டப் பணி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு தயாராக உள்ளன. இலங்கைக்கு நன்மைகளை கொண்டு வரும் கொழும்புத் துறைமுகத்தின் எங்களின் கூட்டு நடவடிக்கை சாதனையாக அமைந்தது-என்றார்.

இதேவேளை, இந்த விஜயத்தின் போது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை தலைவர்களுடன் வாங் யீ கலந்துரையாடினார் என கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் தெரிவித்தார். (அ)

## விக்னேஸ்வரன்...

உத்தியோகபூர் வமாக அறிவித்துள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற் போக்குக் கூட்டணி அரசியல் கட்சியாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் அரசியல் கட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய லங்கா சுதந்திர கட்சி என்ற கட்சியும் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. (அ)

## 10 அமைச்சு...

அமைச்சின் கீழ் இருந்த மத்திய கலாசார நிதியம், புத்தசாசன நிதியம் மற்றும் மத்திய கலாசார நிதிச் சட்டம் ஆகியவை புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் சிறைச்சாலை மறுவாழ்வுக் கான இராஜாங்க அமைச்சு அகற்றப் பட்டு, அதன் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களும் சிறப்பு செயல்பாடுகளும் நீதி அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளன.

கல்விச் சீர்திருத்தங்கள் திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் இருந்த தேசியக் கல்வி ஆணைக்குழு மற்றும் தேசியக் கல்வி ஆணையச் சட்டம் (எண். 1991) ஆகியவை கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

விமான போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சின் விசேட முன்னுரிமைகளின் கீழ் செயல்பாடுகளை மேற்பார்வை செய்வதை இலங்கை முதலீட்டுச் சபை உள்ளடக்கியுள்ளது.

1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (ஒருங்கிணைத்தல்) சட்டம் கைத்தொழில் அமைச்சின் நிறுவன மற்றும் சட்டக் கட்டமைப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐக்கிய...

மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட வேணாவில் பகுதியில் மக்கள் சந்திப்பு ஒன்றில் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டார்.

வேணாவில் முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் இடம்பெற்ற இந்த மக்கள் சந்திப்புக்கு வருகை தந்த சஜித் பிரேமதாஸ முத்துமாரியம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான் வீடமைப்பு அமைச்சராக இருந்த காலகட்டத்தில் கட்டம் கட்டமாக அனைத்து மக்களுடைய வீட்டு பிரச்சனைகளையும் தீர்க்கும் முகமாக பல்வேறு வீட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வந்தேன்.

ஆனால் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கம் குறித்த வீட்டுத்திட்டங்களை திட்டமிட்டு தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால் நான் உங்களிடம் ஒன்றை தெரிவிக்க விழைகின்றேன். ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கமானது உருவாக்கப்படும் அதை நாங்கள் உருவாக்குவோம். அந்த அரசாங்கத்தில் இவ்வாறு நிறுத்தப்பட்ட வீட்டுப் பிரச்னைகள் மட்டுமல்ல வீடற்ற அனைத்து மக்களினதும் வீட்டு பிரச்னையை நிச்சயமாக தீர்க்கப்போம்-என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் லக்சயன் முத்துக்குமாரசாமியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த மக்கள் சந்திப்பில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, புத்திக பத்திரண மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி அமைப்பாளர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.(அ)

# மைத்திரிபாலவை வெளியேற்றுங்கள்

கொழும்பு, ஜன. 11

அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெளியேற்றுமாறு, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் சிலர் கட்சி தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனி வழி பயணத்துக்கு தயாராகி விட்ட சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், திட்டமிட்ட அடிப்படையில் அரசை விமர்சிப்பதாகவும், அரசுக்குள் இருந்து கொண்டு அவர்கள் இவ்வாறு செயற்படுவதால் அது அரசுக்கே பாதகமாக அமையும் எனவும் மொட்டு கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சுதந்திரக்கட்சி தொடர்பில் முடிவொன்ற எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் இது சம்பந்தமாக கட்சி மேல் மட்டம் பரிசீலித்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# வாள்வெட்டில் இளைஞர் படுகாயம்!

வடமராட்சி, ஜன. 11

பருத்தித்துறையில் நேற்று இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை - துன்னாலை தக்குசம் பாதி பகுதியில் இடம் பெற்ற வாள் வெட்டு சம்பவத் தில் பாஸ்கரன் காண்டீபன் (வயது- 27) என்பவரே படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் வேளை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குறித்த இளைஞர் கையில் படுகாயமடைந்தார் என்று தெரியவருகின்றது(ஐ-2)

## சு.க.வின்...

மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அந்தவகையில் சுதந்திரக் கட்சியின் தலைமையில் விரை வில் புதிய அரசு அமைக்கப்படும் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் தேர்தலை ஒருபோதும் பிற்போடக்கூடாது என அவர் மேலும் கூறினார். (அ)

## யாழ்ப்பாண...

அழைத்து வர முடியாத நிலையில் உள்ள முதிய வர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மோசமடைந்து செல்லும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு வீட்டில் வழங்கக்கூடிய மருத்துவ பராமரிப்பு சேவைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டமானது பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை போன்ற ஆதார வைத்தியசாலைகள் மூலம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்த விசேட பராமரிப்பு தேவையானவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை - 021 226 3262, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை-021 205 9227, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை-021 227 1150, ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை-021 221 1660 ஆகிய மருத்துவமனைகளில் தமக்கு அருகில் உள்ள வைத்தியாசலைகளில் ஒன்றின் தொலைபேசி இலக்கங்களுக்கு காலை 8.00 மணி முதல் மாலை 4.00 வரை அழைப்பதன் மூலம் தமக்கு வழங்கப்பட வேண்டிய பராமரிப்பை முன் பதிவு செய்ய வேண்டும்.

இதன் பின் அந்த வைத்தியசாலையில் இருந்து மருத்துவ பராமரிப்பு குழுவினர் நோயாளியின் வீட்டிற்கு வருகை தந்து அவர்களின் நோய் நிலைமையை ஆராய்ந்து வீட்டில் வழங்கக்கூடிய மருத்துவ பராமரிப்பை வழங்குவார்கள். இந்த சேவை மூலம் அவசர மருத்துவ சேவைகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. இந்த சேவை மூலம் அவசர தேவைகள் அற்ற பராமரிப்பு மட்டுமே வழங்கப்படும். (உதாரணமாக - உணவு வழங்கும் குழாய், சிறுநீர் குழாய் மாற்றுதல், மருந்து கட்டுதல், வீட்டில் வழங்கக்கூடிய இயன் மருத்துவ சேவைகள் போன்றவை)

இவ்வாறு அந்த நோயாளிகளுக்கு அவசர மருத்துவ தேவைகள் ஏற்படின் 1990 அவசர அம்புலன்ஸ் சேவையை அழைப்பதன் மூலம் வைத்தியசாலைக்கு செல்ல முடியும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அரசுக்குள்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வரு மாறு:

அரசுக்குள் இருந்துகொண்டு விமர்சனங்களை முன்வைக்க முடியும். எனவே, விமர்சனங்களை முன்வைப்பவர்களை விலக்குவதற்கு பதிலாக, தீர்வுகளை வழங்குவதே பொருத்தமான நடவடிக்கையாகும் என்று அரச தலைவர் பதவியை வகித்த ஒருவர் (மைத்திரிபால சிறிசேன) விமர்சித்துள்ளார். அவரின் இந்த கருத்துடன் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி உடன்படாது.

விமர்சிக்கும் உரிமை இருக்கின்றது. ஆனால் அதற்கு பொருத்தமான இடங்களும் உள்ளன. அரசுக்குள் உள்ள பிரச்னைகளை பாராளுமன்றக்குழுக் கூட்டங்கள் மற்றும் அமைச்சரவையில் சுட்டிக்காட்டலாம். அல்லது தலைவர்களை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து பேசலாம். அதனைவிடுத்து பொது வெளியில் விமர்சிப்பது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது-என்றார். (அ)

## கோட்டாபய...

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித் தார்.

அரசு தற்போது எதிர்நோக்கும் அரசியல் நெருக்கடி தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இராஜாங்க அமைச்சர்களையோ அல்லது அமைச் சர்களையோ பதவி நீக்கம் செய்வதால் அல்லது அமைச்சுக்களின் பொறுப்புக்களை கைமாற்றும் செய்வதால் அரசின் நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ள இன்றைய நிலைமையில் மக்களின் மனதை வெல்லும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே பங்காளிகளான எமது நோக்கம். இதற்காகவே நாம் உள்ளுக்குள் இருந்துகொண்டு பாடுபடுகின்றோம். வெளியாட்களுடன் சேர்ந்து அரசை வீழ்த்துவது எமது நோக்கமல்ல.

எனினும், அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது. அரசின் நகர்வுகளைப் பொறுத்தே அதன் முடிவு தங்கியிருக்கும். ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து - ஆழமாக ஆலோசித்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும்" - என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 11 - 1937



மறைவு 08 - 01 - 2022

### வைரமுத்து கதிர்காமதாசன்

( ஓய்வுபெற்ற காசாளர் இலங்கை வர்த்தக வங்கி - யாழ்ப்பாணம் )

யாழ். அராலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, கனடா Oshawa ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கதிர்காமதாசன் 08-01-2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.அன்னார், வைரமுத்து பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், கனகமாணிக்கம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,லோகலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், பிரசாந்தி, சிவசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகராஜன், லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பரிமளகாந்தி, பவளராணி, பவளகாந்தி, காலஞ்சென்ற பரமேஸ்வரதாசன், சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், குலேந்திரன், புவனராணி மற்றும் கதிர்காமநாதன், சிவயோகேஸ்வரி, காலஞ்சென்ற கனகலட்சுமி, கிருஸ்ணவேணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கணேசபிள்ளை, குழந்தைவேலு ஆகியோரின் சகலனும்,காலஞ்சென்ற மகாதேவன், செல்வமலர் மற்றும் குழந்தைவேலு, திலகவதி ஆகியோரின் சம்பந்தியும்,ஆரணி, பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

பார்வைக்கு:
Wednesday, 12 Jan 2022 9:30 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Wednesday, 12 Jan 2022 11:00 AM - 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Wednesday, 12 Jan 2022 1:15 PM - 1:45 PM
Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**குகராஜன் சாந்தி - மகள்**
**Mobile : +16473887065**
**லோகநாதன் சாந்தினி - மகள்**
**Mobile : +14168959963**
**சிவதாசன் - சகோதரன்**
**Mobile : +16692209543**

தகவல்:
**குடும்பத்தினர்**



## கோறளைப்பற்று பிரதேச சபை சுகாதார ஊழியர் பகிஷ்கரிப்பு

### கழிவகற்றல் நடவடிக்கை பாதிப்பு

*மட்டக்களப்பு, ஜன. 11*

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபை சுகாதார ஊழியர்கள் தொடர்ச்சியாக பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் பிரதேசத்தில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

பாசிக்குடா சுற்றுலாப் பகுதிகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் திண்மக் கழிவுகள் தேங்கி கிடப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது பருவமழை பெய்வதனால் குப்பைகள் மழை நீரில் அகப்பட்டு துர்நாற்றம் வீசுவதாகவும் நுளம்புகளின் பெருக்கத்துக்கு வழியமைக்க வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 6 ஆம் திகதி பணியாளர் ஒருவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊழியர் வேலை நிறுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

சந்தேக நபர் கைது விடயத்தில் வாழைச்சேனை பொலிஸார் எடுக்கும் நடவடிக்கையை பொறுத்தே தங்களது போராட்டம் குறித்து முடிவு எடுக்கப்படும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் கூறுகின்றனர். (அ)



## கிழக்கு பாடசாலைகளில் நேற்று மாணவர்கள் வருகை அதிகரிப்பு

*மட்டக்களப்பு, ஜன. 11*

பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் நேற்று முழுமையாக ஆரம்பமாகின.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களிலும் நேற்று முழுமையான மாணவர்கள் அழைக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பட்டிருப்பு,மட்டக்களப்பு மேற்கு,மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி,கல்குடா ஆகிய ஐந்து வலயங்களிலும் நேற்று முழுமையான மாணவர்களுடன் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமான நிலையில் மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 93 வீதத்துக்கும் அதிகமான பிள்ளைகள் முழுமையாக பாட சாலைக்கு சமூகம் தந்தனர் என வலய கல்விப் பணிப் பாளர்கள் தெரிவித்தனர்.

பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகளைப் பேணி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதை காண முடிந்தது. (அ)

## தனியார்துறை ஊழியர்களுக்கு 5000 ரூபாய் வழங்குவது கடினம்

### தனியார் துறை தலைவர்கள்

*கொழும்பு, ஜன. 11*

நாட்டின் பொருளாதார நிலை சீராகும் வரை தனியார் துறை ஊழியர்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவது கடினம் என தனியார் துறைகளின் தலைவர்கள், தொழில் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் இலங்கையில் உள்ள தனியார் துறைகளின் தலைவர்களுடன் நேற்று தொழில் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி வருவாயும் சரிந்துள்ளது, கட்டண உயர்வு, உற்பத்தி செலவுகள் அதிகரிப்பு, மூலப்பொருட்கள் இறக்குமதி மற்றும் செலவுகள் அதிகரிப்பு மற்றும் வங்கிகள் அறவிடும் அதிக வட்டி வீதங்கள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறப்பு

*கந்தளாய், ஜன. 11*

திருகோணமலை கந்தளாய் குளத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கந்தளாய் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ள நிலையிலேயே அதன் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

குளத்தின் நான்கு வான் கதவுகள் ஓர் அடிக்கு திறக்கப்பட்டுள்ளன. தற்போது கந்தளாய் நீர்த்தேக்கத்தில் சுமார் ஒரு இலட்சத்து 7 ஆயிரம் கனஅடி தண்ணீர் தேங்கி உள்ளதாகவும் இவ்வாறு திறக்கப்பட்ட வான் கதவுகளினூடாக விநாடிக்கு 450 கன அடி வீதம் நீர் வெளியேற்றப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமலை மருத்துவமனையின் இருதய சிகிச்சையை நிறுத்த சதி!

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி சாடல்

*திருகோணமலை, ஜன. 11*



திருகோணமலை பொது வைத்தியசாலையை இடம் மாற்றப் போவதாகக் காரணம் காட்டி ஜப்பான் அரசாங்கம் வழங்கிய 220 கோடி ரூபாய் பெறுமதியான இருதய சிகிச்சை பிரிவை இடைநிறுத் தும் செயல்திட் டமே இவ் வாறு முன்னெடுக்கப்படு கிறது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் கலாநிதி ஸ்ரீஞானேஸ்வரன் திருகோணமலை ஊடக இல்லத்தில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே இவ்வாறு சாடினார்.

மேலும், திட்டமிட்டு இருதய மருத்துவ பிரிவை அமைக்கவிடாது செய்வதற்கான செயல்திட்டம் ஆளுநர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோரால் இடம்பெறுகின்றன.

வைத்தியசாலை ஓரிடத்தி லும் இருதய சிகிச்சை மையம் இன்னோரிடத்திலும் அமை யும்போது பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உள் ளாக நேரிடும் என்பதுடன் வைத்தியசாலை முற்றாக மாற்றப்படுமா யின் அதற்கு பல வருட காலங்கள் ஏற்படும். இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயல்படுவதற்கும் எதிர்ப்பை வெளியிடவும் பொதுமக்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கமிலி புறம் நடுக்காவேரி,சேட்டை திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை



மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு